ராஜதந்திரம் = ...

விரோதம் = ...

ஞானம் = ...

தியாகம் = ...

யோகம் = ...

விஞ்ஞானம் = ...

உல்லாசப்பயணம் = ...

III नीचे लिखे समासों को उनके पदों में निग्रह कीजिए।

उदाहरण: காலடி = கால் + அடி

1. நடைக்களைப்பு = ... + ...
2. இரண்டாயிரம் = ... + ...
3. பதினாறாயிரம் = ... + ...
4. கண்ணாடிச்சாமன் = ... + ...
5. பழத்தோட்டம் = ... + ...
6. வயிற்றுப்புண் = ... + ...
7. குடும்பவாழ்க்கை = ... + ...
8. பழக்கூடை = ... + ...
9. சொந்தப்பெயர் = ... + ...

IV सही शब्द चुनकर वाक्य पूरे कीजिए।

1. சாமான்களைத் தன் கால் .... வைக்கிறான்.
   (அடி, மேல், கீழ்)
2. என் கண்ணாடிச் சாமான்களின் .... ஆயிரம் ரூபாய். (மதிப்பு, விலை, எடை)
3. .... ஆயிரம் ரூபாய்க்கும் பொருள் வாங்குவேன். (ஒரு, இரண்டு, ஆயிரம்)
4. என் மனைவியோடு .... வாழ்வேன்.
   (நிம்மதியாக, மெதுவாக, அமைதியாக)

V कोष्ठक में दिए गए हर एक शब्द को रेखंकित शब्द के बदले में प्रयोग करके पूरे वाक्य ठीक ङंग से पुनः लिखिए।

1. குழந்தையின் அழுகை உனக்குக் <u>கேட்கவில்லை</u> என்று கேட்டான்.
   (கேட்கவில்லையே, கேட்கவில்லையோ, ஏன் கேட்கவில்லை?)
2. குழந்தையின் <u>அழுகை</u> உனக்குக் கேட்கவில்லை என்று கேட்டான்.
   (அலறல், பேச்சு, சத்தம்)
3. குழந்தையின் அழுகை <u>உனக்கு</u> ஏன் கேட்கவில்லை என்று கேட்டான்.
   (உனக்குத்தான், உனக்கு ஏன், உனக்கு மட்டும்)

VI वाक्यों को वर्तमान काल में लिखिए।

1. நிலம் வாங்குவேன். ....
2. என் மனைவி வருவாள். ....
3. வீடு கட்டுவேன். ....
4. தூக்கம் வரும். ....
5. மர நிழலில் படுப்பேன். ....
6. சாமான்களை விற்பான். ....

VII निम्न लिखि वाक्यों को उदाहरण के अनुसार बहुवचन में लिखिए।

उदाहरण: இரண்டாயிரம் ருபாய்க்குப் பொருள்கள் வாங்குவேன் .
இரண்டாயிரம் ருபாய்க்குப் பொருள்கள் வாங்கமாட்டேன்.

1. பதினாறாயிரம் ருபாய்க்கு நிலம் வாங்குவேன்.

2. பெரிய பழத்தோட்டம் ஆக்குவேன்.
3. அழகான வீடு கட்டுவேன்.
4. எனக்கு ஒரு மனைவி வருவாள்.
5. ஆடு, மாடு , குதிரை, எல்லாம் வாங்குவேன்.
6. எட்டி உதைப்பேன்.

VIII तमिल में अनुवाद कीजीए।

(रिखत = லஞ்சம் வாங்கு, झूठ = பொய் பேசு)

मैं तमील पढता हू। पिताजी मुझे पैसे देंगे। आप कल घर पर क्या करेंगें?
वहाँ मत जाओ। मेरी माँ ढाटेगी।
वे अच्छे आदमी हैं ,कभी रिखत नहीं लेंगे ।
झूठ मत बोलो, पिताजी मारेंगे
भगवान सच्छे को हमेशा मदद करेंगे ।मैं कल स्कूल नहीं जाऊँगा ।
क्या कल तुम स्कूल जाओगे ?
नहीं, मैं भी स्कूल नहीं जाऊँगा, मैं कल टी.वी. पर ओलिम्पिक खेल-कूद देखूँगा।

IX अपनी *भविष्य की योजनाओं* पर छोटासा एखलेख लिखिए।

11. என் ஃப்ரிட்ஜ் கதை

இப்போதெல்லாம் வீட்டில் எனக்கு நிம்மதி என்பதே இல்லை. காரணம், என் மனைவியின் ஃப்ரிட்ஜ் பற்றிய பேச்சுதான். தினமும் அவள் சொல்லுவாள், "நீங்களும் ஒரு ஆபீஸர். பேருக்குத்தான் ஆபீஸர். பக்கத்து வீட்டுக்காரரைப் பாருங்கள், அவர் ஒரு சாதாரண கான்ஸ்டேபிள்தான். அவர் வீட்டில் ஃப்ரிட்ஜ் உண்டு. எதிர் வீட்டுக்காரர் ஒரு ஆரம்பப்பள்ளி ஆசிரியர்தான். அவர் வீட்டிலும் ஃப்ரிட்ஜ் இருக்கிறது. நம் வீட்டில் தான் ஃப்ரிட்ஜூம் இல்லை, க்ரிட்ஜூம் இல்லை. அவர்களோ தினமும் என்னை ஒரு மாதிரி பார்க்கிறார்கள். எனக்கு எவ்வளவு வெட்கமாக இருக்கிறது தெரியுமா? உங்க-ளுக்கு இதெல்லாம் எங்கே புரிகிறது?"

தினமும் அவளுடைய இந்தப் பாட்டு என் பொறுமையைச் சோதிக்கும். எங்களுக்குள் அடிக்கடிச் சண்டைக்கூட நடக்கும். என் மனைவியின் ஆசையை எப்படியும் நிறைவேற்ற வேண்டும் என்று ஒரு தீர்மானத்துக்கு வருகிறேன்.

என் ஆத்ம சிநேகிதர் வீரபத்ர சிங். அவர் ஒரு ஃப்ரிட்ஜ் மெக்கானிக்கும் கூட. அவர் மூலமாக பழைய ஃப்ரிட்ஜ் ஒன்றை ஆயிரம் ரூபாயில் வாங்குகிறேன். என் ஏப்ரல் மாதச் சம்பளத்தின் "முதல் போணி" இதோ இந்த ஃப்ரிட்ஜ் தான்!

இப்போது என் மனைவிக்குப் பரம திருப்தி. ஒரே சந்தோஷம். கோடைக்காலத்தில் ஐஸ் வாட்டர், ஐஸ் மோர், ஜில்லென்று ஜூஸ் வகைகள், ஐஸ்கிரீம், இன்னும் என்னென்ன சாப்பிடலாம் என்று ஒரு பட்டியிலே தருகிறாள்.

பத்து நாட்கள் போயிருக்கும். ஃப்ரிட்ஜில் ஏதோ ஒரு புது விதமான சத்தம். வெட் க்ரைண்டர் சத்தம் போல் ஒரே சத்தம். ஆனாலும் தொந்தரவு ஒன்றுமில்லை. ஐஸ் வாட்டர், ஜில்லென்று சர்பத் எல்லாம் தொடர்கின்றன.

ஒரு விடுமுறை நாள் நண்பகல். ஒரே வெயில். "ஃப்ரிட்ஜில் ஐஸ்கிரீம் வைத்திருக்கிறேன், வாங்க சாப்பிடலாம்.", என்று கூப்பிட்ட என் மனைவி உற்சாகத்தோடு அதைத் திறக்கிறாள். ஐஸ்கிரீம் பவுடர் கலந்த பால் பாலாக அப்படியே இருக்கிறது. அதுவும் இளஞ்சூடாக!

மெக்கானிக்கை உடனே அழைக்கிறேன். அவர் ஃப்ரிட்ஜின் அடியிலும் பின்பக்கத்திலும் ஒரு நோட்டம் பார்க்கிறார். "ஒன்றுமில்லை சார். கம்ப்ரசர், டைம்ரிலே இரண்டையும் பழுது பார்க்கவேண்டும். ரிப்பேர் செலவு ஆயிரத்துக்குள் ஆகலாம்", என்கிறார் அவர். எனக்கோ மூக்குக்கு மேல் கோபம் வருகிறது. வயிற்றெரிச்சலில் "ரிப்பேர் கிப்பேர் ஒன்றும் வேண்டாம்" என்று ஆத்திரத்தில் கத்துகிறேன்.

ஃப்ரிட்ஜின் மின் இணைப்பைத் துண்டிக்கிறேன். உள்ளே இருக்கும் பாட்டில்களை எல்லாம் அப்புறப்படுத்துகிறேன். அன்று முதல் அதை பீரோவாக மாற்றுகிறேன். நீங்களே சொல்லுங்கள். ஆயிரம் ரூபாய்க்குள் இப்போதெல்லாம் பீரோ எங்கே கிடைக்கிறது? ஆனால் ஒரு கஷ்டம். வெட் கிரைண்டர் போன்ற அந்த சத்தம் இப்போது வீட்டில் இல்லவே இல்லை. அதனால்தானோ என்னவோ இப்போது எனக்குச் சரியாக தூக்கம் வரவே மாட்டேன் என்கிறது. எனக்கு மட்டுமா என்ன ? என் மனைவிக்குங்கூடத்தான்.

शब्दार्थ

நிம்மதி	चैन	தினம்	रोज
பேருக்கு	नाम मात्र के लिए	சாதாரணம்	साधारण
வெட்கம்	लज्जा	பொறுமை	सहनशीलता
சண்டை	झगडा	ஆசை	इच्छा
நிறைவேற்று	काम आदी पूरा कर	தீர்மானம்	निर्णय
மாதம்	माह	மெக்கானிக்	मैकानिक
போணி	बोहनी	சந்தோஷம்	खुशी
கோடை	गर्मी के दिन	என்னென்ன	क्या-क्या
பட்டியல்	सूची	விதம்	प्राकार
சத்தம்	ध्वनि	தொந்தரவு	परेशानी
விடுமுறை	छुट्टी	நண்பகல்	दो पहर
வெயில்	धूप	ஒரே வெயில்	एक दम धूप

உற்சாகம்	उत्साह	அன்று	उस दिन
பின்பக்கம்	पीछे की तरफ	பழுதுபார்	ठीक करना
செலவு	खर्च	பீரோ	अलमारी
கஷ்டம்	कठिनाई	நோட்டம்	ध्यान से देख
இளஞ்சூடு	हलका सा गरम	பார்	

அப்புறப்படுத்து दूर कर

ஆத்மசிநேகிதர் जिगरी दोस्त

अभ्यास

I पाठ के आधारपर प्रशनों को उत्तर लिखिए।

1. மனைவியின் ஆசை என்ன ?
2. வாங்கிய ஃப்ரிட்ஜ் பழையதா ? புதியதா ?
3. ஃப்ரிட்ஜ் வாங்கிய விலை என்ன ?
4. ரிப்பேர் செலவு எவ்வளவு ?
5. ஃப்ரிட்ஜ் சரி செய்யப்பட்டதா ?
6. ஃப்ரிட்ஜ் எப்படி பீரோவாக மாறியது ?

II निम्न लिखित शब्दों को காரர் ओर காரி जोडकर लिखिए।

उदाहरण: வீடு = வீட்டுக்காரர், வீட்டுக்காரி

1. கடை = ..., ...
2. பால் = ..., ...
3. பணம் = ..., ...
4. சொந்தம் = ..., ...
5. உறவு = ..., ...
6. தோட்டம் = ..., ...

7. பூ = ..., ...
8. தமிழ் = ..., ...
9. ஹிந்தி = ..., ...
10. ஊர் = ..., ...

III निम्न लिखित समासों का विग्रह कीजिए और उन का अर्थ लिखिए।

उदाहरण: கோடைக்காலம் --> கோடை + காலம்
गर्मी काल / समय

மாதச்சம்பளம்	பின்பக்கம்	வயிற்றெரிச்சல்
இதெல்லாம்	என்னென்ன	எள்ளெண்ணெய்
அங்குமிங்கும்	ஒன்றுமில்லை	இப்போதெல்லாம்

IV सही शब्द चुनकर ठीक से वाक्य पूरे कीजिए। ।

1. நீங்கள் .... ஒரு ஆபீஸர்.
   (உம், மேல், கூட)
2. எதிர் வீட்டுக்காரர் சாதாரண ஆபிஸர் ....
   (கூட, தான், ஏ)
3. அவர்கள் .... என்னை ஒரு மாதிரி பார்க்கிறார்கள். (ஓ, ஏ, தான்)
4. நீங்கள் .... சொல்லுங்கள்.
   (ஏ, தான், தானே)
5. அதனால் .... என்னவோ தூக்கம் வரமாட்டேன் என்கிறது. (ஏ, தானோ, கூட)

V सही या गलत बताइए ।

1. இப்போதெல்லாம் எனக்கு வீட்டில் நிம்மதி உண்டு.
2. புது ஃப்ரிட்ஜை ஆயிரம் ரூபாய்க்கு வாங்குகிறேன்.

3. அடிக்கடி எங்களுக்குள் சண்டை நடக்கும்.
4. என் மனைவிக்குப் பரம திருப்தி.
5. ரிப்பேர் செலவு இரண்டாயிரம் ஆகும் என்று மெக்கானிக் சொல்கிறார்.
6. ஃப்ரிட்ஜை பெட்டியாக மாற்றுகிறேன்.
7. கிரைண்டர் சத்தம் இல்லாமல் எனக்குத் தூக்கம் வருகிறது.

VI नीचे दिए गए हर एक शब्द को प्रयोग करके वाक्य पुनः लिखिए।

1. எங்களுக்குள் அடிக்கடி சண்டை நடக்கும்.
   (கடைகாரர்களுக்குள், எப்போதாவது, நடக்காது)
2. ஃபிரிட்ஜை ஆயிரம் ரூபாய்க்கு வாங்குகிறேன்.
   (மேஜை தான், மூவாயிரம், வாங்குவேன்)
3. என் மனைவிக்கோ ஒரே சந்தோஷம்.
   (தம்பிக்கோ, அம்மாவுக்கோ, அக்காவுக்குத்தான்)
4. எனக்கோ கோபம் வருகிறது.
   (தூக்கம், அவருக்கோ, எனக்குக்கூட)

VII उदाहरण के अनुसार वाक्य बदलिए।

उदाहरण: அதை வாங்கு ---> அதை வாங்காதே.

1. பக்கத்து வீட்டுக்காரரைப் பார்.
2. ஃப்ரிட்ஜுக்கு ஆயிரம் ரூபாய் செலவு செய்.
3. ஃப்ரிட்ஜை பழுது பாருங்கள்.
4. பழைய ஃப்ரிட்ஜை வாங்குங்கள்.
5. மெக்கானிக்கைக் கூப்பிடு.

VIII नीचे दिए गए वाक्यों को भविष्य काल में बदलिए ।

1. நான் புது சைக்கிள் வாங்குகிறேன்.
2. எனக்குக் கோபம் வருகிறது.
3. அவளுக்குத் தூக்கம் வருகிறது.
4. அவள் ஒரு பட்டியலை தருகிறாள்.
5. அவர் தீர்மானம் செய்கிறார்.
6. பக்கத்துவீட்டுக்காரரைப் பார்க்கிறான்.

IX रेखांकित शब्दों को प्रयोग करके प्रश्नवाचक वाक्य लिखिए ।

1. நீ ஆயிரம் ரூபாய்க்குள் பீரோ வாங்கினாய்.
2. அவளுக்கு என்னை மிகவும் பிடிக்கும்.
3. அவர் இப்படித்தான் பேசுவார்.
4. எனக்கு வீட்டில் நிம்மதி இல்லை.
5. பழைய ஃப்ரிட்ஜை வாங்கினேன்.
6. கடைக்காரர் நாணயமானவர்.
7. எனக்கு மூக்குமேல் கோபம் வருகிறது.

X तमिल में अनुवाद कीजिए।

मुझे कुछ चावल चाहिए । यह तो अच्छा नहीं है। अच्छा चावल ही दिखाइए । क्या यही चावल है ?

यह देखिए, यह चावल कितने का है ? परंतु यह चावल भी अच्छा नहीं है। अब क्या करें ? ठीक है।

इसी में से दो किलो दे दो। क्या सौ रूप्ये के टूटे मिलेंगें ? हो तो दे दीजिए । बहुत अच्छा होगा ।

12. சின்னச் சின்ன விஷயங்கள்

பண்டிகைகள், திருமணங்கள், விழாக்கள் இவற்றில் நாம் பல விதமான அறுசுவை உண்டிகளை அருந்துகிறோம். விருந்தினரும், நண்பர்களும், நாமும் மகிழ்ச்சியோடு அவற்றில் பங்கு பெறுகிறோம். நம்முடைய களிப்பிலும், ஆனந்தத்திலும் எவ்வளவோ உணவுப் பொருட்களை நாம் வீண் செய்கிறோம். எறிகிறோம். ஆனால் அவற்றை யாருமே அவ்வளவாகப் பொருட்படுத்துவது கிடையாது.

காந்தியடிகள் அடிக்கடிச் சொல்லுவார், "எதையும் வீணாக்காதீர்கள். வீட்டுச் சொத்தானாலும் சரி. பொதுச் சொத்தானாலும் சரி. அவற்றைப் பாழாக்கவேண்டாம். சேமிப்புப் பழக்கம் வாழ்க்கைக்கு மிகவும் அவசி-யமானது. வீட்டு வளத்துக்கும் நாட்டு வளத்துக்கும் சேமிப்பு கட்டாயம் வேண்டும்". இது அவர் வாக்கு.

நம்முடைய தினசரி வாழ்க்கையையே எடுத்துக்கொள்-வோமே. எவ்வளவு பொருட்களை நாம் வீண் செய்கிறோம். எப்படி எல்லாம் விரயம் பண்ணுகிறோம். உதாரணமாகக் கலியாண வீடுகளிலே பாருங்கள். ஏராளமான உணவுப் பொருள்களை வீண் செய்கிறார்கள். தெருவில் எறிகிறார்கள். யாருக்கும் பயனில்லாமல் தெருவில் எறிவதில் என்ன லாபம்? நம் நாட்டில் எவ்வளவோ பேர் பட்டினியாக இருக்கிறார்கள். தெருவில் எறிவதைவிட அந்த ஏழை எளிய மக்களுக்குக்

கொடுத்து உதவலாமே! இதை நாம் யோசித்துப் பார்க்கவேண்டும்.

இன்னுங்கூடப் பார்க்கலாம். குடிநீருக்காகத் தெருவில் குழாய்கள் இருக்கின்றன. எத்தனைபேர் அவற்றை ஒழுங்காகப் பயன்படுத்துகிறார்கள்? சிலர் குழாயடி-யிலேயே குளிக்கிறார்கள். பாத்திரங்கள் தேய்க்கிறார்கள். துணி துவைக்கிறார்கள். வாகனங்களைக் கழுவுகிறார்கள். ஆனால் குழாயை மட்டும் மூடவே மாட்டார்கள்! சில ஊர்களில் குடிதண்ணீர் கிடைக்கவே கிடைக்காது. அப்படியொரு பஞ்சம். இப்படி இருக்கும்போது தண்ணீரை வீண்செலவு செய்வதில் யாருக்கு லாபம்? நமக்குத்தானே நஷ்டம். நாம் சிந்திக்க வெண்டும்.

உணவுப்பொருள், குடிநீர் மட்டுமல்ல. மின்சாரம் போன்றவற்றையும் நாம் எப்படி யெல்லாம் வீணாக்குகிறோம். சிலர் வீடுகளில் பகலில் கூட மின்விளக்கு எரிந்துகொண்டேயிருக்கும். தெரு விளக்குகளும் அப்படித்தான். எல்லாரும் அறைக்கு வெளியே இருக்கும்போது உள்ளே சுற்றிக்கொண்டிருக்கும் மின் விசிறியை நிறுத்த மாட்டார்கள். ரேடியோ தன்பாட்டுக்கு அலறும். கேட்போர் யாரும் இருக்கமாட்டார்கள். யோசியுங்கள். எவ்வளவு மின்சாரம் வீணாகிறது ?

இது போலத்தான் எரிவாயு, பெட்ரோல், மண்ணெண்-ணெய், விறகு போன்றவற்றையும் எப்படி எப்படியோ

வீணாக்குகிறோம். இவையெல்லாம் எத்தனை நாளைக்குக் கிடைக்கும்? ஒரு நாள் கிடைக்காமலும் போகலாம். ஆகையால் இவற்றை நாம் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும்.

இவையெல்லாம் சின்னச்சின்ன விஷயங்கள்தான். ஆனால் பெரிய கருத்துகள். நம்முடைய சொந்தச் சொத்தானாலும் சரி. பொதுச் சொத்தானாலும் சரி. ஒழுங்காக நம்முடைய தேவைக்கு ஏற்றமாதிரி சிக்கனமாகப்பயன்படுத்தக் கற்றுக்கொள்ள வேண்டும். சிக்கனமாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நம் வீடும் வளம் பெறும். நாடும் வளம் பெறும்.

शब्दार्थ

திருமணம்	शादी	விழா	त्योहार,उत्सव
அறுசுவை	छे प्रकार के स्वाद	உண்டி	खाद्य पदार्थ
விருந்தினர்	मेहमान	நண்பர்	दोस्त, मित्र
மகிழ்ச்சி	खुशी	களிப்பு	खुशी
வீண்செய்	व्यर्थ करना	எறி	फेंक
வாழ்க்கை	जीवन	வளம்	समृद्धि
சேமிப்பு	बचत	கட்டாயம்	जरूर
விரயம் பண்ணு	व्यर्थ करना	பாத்திரம் தேய்	बर्तन माँजना
தெரு	सड़क, गली	யாருக்கும்	किसी को
உபயோகம்	उपयोग	உதவு	मदद करना
கவனி	ध्यान देना	குடிநீர்	पेयजल

குழாய்	नल	பயன்படுத்து	उपयोग करना
குளி	नहाना	கலியாணம்	शादी
மின்சாரம்	बिजली	விசிறி	पंखा
நிறுத்து	रोकना	பகல்	दिन
தெரு விளக்கு	सड़क की लाइट	வெளியே	बाहर
அலறு	चिल्लाना	விறகு	ईंधन
சிக்கனம்	किफ़ायती	விஷயம்	विषय
சொத்து	जायदाद	தினசரி	रोज़
எரிவாயு	पकानेवाली गैस		
மண்ணெண்ணெய்	मिट्टी का तेल		
பொதுச்சொத்து	सार्वजनिक संपत्ति		
உணவுப்பொருள்	खाद्य पदार्थ		
பொருட்படுத்து	परवाह करना		
வீட்டுச்சொத்து	घर की संपत्ति		
எடுத்துக்கொள்	लेना		

अभ्यास

I पाठ के आधार पर निम्न प्रश्नों के उत्तर लिखिए।

1. காந்தியடிகள் அடிக்கடி என்ன சொல்லிவந்தார் ?
2. ஏழைகளுக்கு எப்படி உதவிசெய்யலாம் ?
3. தண்ணீரும் மின்சாரமும் எப்படியெல்லாம் வீணாகின்றன ?
4. நம் வீடும், நாடும் வளம்பெற என்ன சய்யவேண்டும்?

II बहुवचन लिखिए।

(क) **उदाहरण:** மாணவர் = மாணவர்கள்

பண்டிகை	குழாய்	மின்விசிறி	அறை
வீடு	நாடு	காய்	ஊர்

(ख) **उदाहरण:** பழம் = பழங்கள்

நிறம்	விஷயம்	மைதானம்	நகரம்
வாகனம்	பாத்திரம்	திட்டம்	எண்ணம்

(ग) **उदाहरण:** விழா = விழாக்கள்

பூ	ஈ	தேனீ	தெரு
பசு	பேனா	போட்டோ	விழா

III कोष्ठक में दिए गए हिन्दी शब्दों के समान तमिल शब्दों से वाक्य पूरे कीजिए।

1. உங்களுக்கு .... த் தெரியும் ? (कैसे)
2. அவன் .... வீட்டுக்கு வரவில்லை? (क्यों)
3. அவருக்கு .... தெரியும் ? (क्या)
4. அவர்களுக்கு .... தெரியும் ? (कितना)
5. மிஸ்ராவுக்கு .... தான் வேண்டும். (उतना)
6. நீ .... ஊருக்கு போகிறாய் ? (कब)
7. என் மகன் வீட்டில் .... இல்லை. (अब)
8. இது .... வீடு ? (किसका)

IV उदाहरण के अनुसार निम्न लिखित वाक्यों को निषेधात्मक बनाइए।

उदाहरण: குழாயடியில் குளிப்பார்கள்.

---> குழாயடியில் குளிக்கமாட்டார்கள்.

1. வாகனங்களைக் கழுவுவார்கள்.
2. பாத்திரங்களைத் தேய்ப்பார்கள்.
3. குழாயை மூடுவார்கள்.
4. நாம் அறுசுவை உண்டி உண்போம்.
5. அவன் தினமும் கடைக்குப் போவான்.
6. கமலம் ஊருக்குப் போவாள்.
7. உணவுப் பொருள்களை வீணாக்குவார்கள்.

V उदाहरण के अनुसार निम्न लिखित वाक्यों को प्रश्नवाचक बनाइए।

उदाहरण: பேனா ஏழு ரூபாய்.

1. பேனாவா ஏழு ரூபாய் ?

2. பேனா ஏழு ரூபாயா ?

1. நீங்கள் கான்பூர் போகிறீர்கள்.
2. என் தாய் மொழி ஹிந்தி.
3. இந்தக் கணக்கு தவறு.
4. ராமன் தான் முதல் ரேங்க்.
5. காலையில் இருந்து அவன் பட்டினி.

VI उदाहरण के अनुसार निम्न लिखित वाक्यों को बदलिए।

(क) उदाहरण: உனக்கு இது வேண்டுமா ?

அது வேண்டுமா?

1. எனக்கு இதுவும் வேண்டும்.

அதுவும் வேண்டும். இரண்டும் வேண்டும்.

2. எனக்கு இதுவும் வேண்டாம்.
அதுவும் வேண்டாம். இரண்டும் வேண்டாம்.

1. உங்களுக்குப் பென்சில் வேண்டுமா ?
பேனா வேண்டுமா ?
2. கமலத்துக்குப் புடவை வேண்டுமா ?
ஜாக்கெட் வேண்டுமா ?

(ख) **उदाहरण:** எனக்குத் தோசை பிடிக்கும்.
இட்டிலி பிடிக்கும்.

1. எனக்குத் தோசையும் பிடிக்கும்.
இட்டிலியும் பிடிக்கும். இரண்டும் பிடிக்கும்.
2. எனக்குத் தோசையும் பிடிக்காது.
இட்டிலியும் பிடிக்காது. இரண்டும் பிடிக்காது.

1. மிஸ்ராவுக்குக் கோபாலைப் பிடிக்கும்.
ரகுவைப் பிடிக்கும்.
2. அவளுக்குத் தமிழ்ப்பாட்டுப் பிடிக்கும்.
ஹிந்திப் பாட்டுப் பிடிக்கும்.

VII उदाहरण के अनुसार वाक्यों को जोड़कर लिखिए।

उदाहरण : கடையில் புத்தகம் கிடைக்கிறது.
நடராஜன் சொல்லுகிறார்.
கடையில் புத்தகம் கிடைக்கிறது என்று நடராஜன் சொல்லுகிறார்.

1. நாளைக்கு ஹோலிப் பண்டிகை. மிஸ்ரா சொல்லுகிறார்.

2. அவர் கூட தமிழ்க்காரர்தான். மூர்த்தி சொல்லுகிறார்.
3. உனக்குப் பணம் தரமாட்டேன். குப்தா சொல்லுகிறார்.

VIII दिए गए `क' और `ख' विभागों के उपयुक्त वाक्यांशों को जोड़कर वाक्यों में प्रयोग कीजिए ।

(क)	(ख)
நான் நாளைக்கு	குடிக்கமாட்டார்.
நாம் அவசியம்	யாருக்கு லாபம் ?
அவர் தண்ணீர்	ஊருக்குப் போவேன்.
மிஸ்ரா இன்று	போகமாட்டாள்.
இன்று மழை	கடைக்குப் போகிறார்.
கமலம் ஸ்கூலுக்குப்	வரும்.
குடிநீரை வீணாக்குவதில்	சிந்திக்க வேண்டும்.

IX निम्न लिखित शब्दों का प्रयोग करके दिए गए वाक्यों को फिर से लिखिए।

(நீ, நீங்கள், அவன், அவர்கள், இவர்கள்)

நான் படிப்பேன்.	நான் படிக்கிறேன்.
நான் எழுதுவேன்.	நான் எழுதுகிறேன்.
நான் சொல்லுவேன்.	நான் சொல்லுகிறேன்.

X तमिल में अनुवाद कीजिए।

उत्तर भारत में होली एक मुख्य त्योहार है । इसे सारे उत्तर भारत में धूमधाम से मनाते हैं । सब जगह होली का दहन होता है । इस समय

गेहूँ और चने की नई फ़सल आती है । बड़े और छोटे, स्त्री और पुरुष एक दूसरे पर रंग डालते हैं । बाद में नये कपड़े पहनते हैं । बड़े छोटों को आशीर्वाद देते हैं। होली उल्लास का त्योहार है । इससे प्रेम भाव बढ़ता है। (उल्लास = உல்லாசம்,परस्पर = பாஸ்பரம், प्रेम भाव = அன்பு)

XI गाँव में मनायेजानेवाले *एक उत्सव* के बारे में दस वाक्य तमिल में लिखिए ।

13. புகார்க் கடிதம்

மதுரை கிழக்குத் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் உயர்திரு. ராமநாதன் எம்.ஏ.பி.எல். அவர்களுக்குப் பூங்குளம் கிராம வாசிகள் அனுப்பும் மகஜர்.

அன்பும் மதிப்பும் மிக்க ஐயா அவர்களே,

கடந்த மாதம் நம் மாவட்டத்தில் பலத்த மழை பெய்தது. கடந்த பத்து வருடங்களில் இப்படியொரு மழையை நாங்கள் பார்த்ததில்லை. வைகைக்கரை உடைந்தது. பெரும் வெள்ளம் ஊர்களில் புகுந்தது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

அந்த வெள்ளத்தால் எங்கள் கிராமத்திற்குப் பலத்த சேதம் ஏற்பட்டது. எங்கள் கிராமத்தில் 27 வீடுகள் முற்றிலும் விழுந்துவிட்டன. 25 வீடுகளில் சுவர்கள் இடிந்தன. கூரை சரிந்தன. மண் வீடுகள் இருந்த இடமே தெரியவில்லை. கல் கட்டிடங்கள் மட்டும் தப்பின. அவற்றிலும் கூட பல வீடுகளில் தரை உள்வாங்கியது.

ஏராளமான ஆடு, மாடு, கோழி, பன்றிகள் மாண்டன. பயிர்கள் முற்றிலுமாக நாசம் அடைந்துவிட்டன. பல லட்ச ரூபாய்களுக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டிருக்கும் என்று சொல்லுகிறார்கள். வெள்ளத்தின் பாதிப்பில் இருந்து நாங்கள் இன்னமும் மீளவில்லை. பாலுக்குப்

பசுக்களோ எருமைகளோ இல்லை. விவசாயத்திற்குக் காளைகளோ எருதுகளோ இல்லை.

இது தொடர்பாக நாங்கள் பஞ்சாயத்து யூனியன் தலைவருக்கும், கலெக்டருக்கும் பலமுறை எழுதினோம். ஆனாலும் இதுவரை எங்களுக்கு எந்தவிதமான நஷ்டஈடும் கிட்டவில்லை. தாங்கள் கூடிய விரைவில் இந்த விஷயத்தைக் கவனிக்க வேண்டும். ஏழைகள் எங்கள் துயரத்தைப் போக்கவேண்டும் என்று வேண்டிக்கொள்கிறோம். உடனடி நிவாரணம் கிட்டவில்லையெனில் வரும் ஜனவரி மாதம் 30 -ஆம் தேதி தியாகிகள் தினத்திலிருந்து நாங்கள் உண்ணாவிரதப் போராட்டத்தைத் துவக்குவோம் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இப்படிக்கு
பூங்குளம் கிராமப் பொதுமக்கள்.

शब्दार्थ

மகஜர்	सामूहिक अर्जी	துயர்	दुख
உறுப்பினர்	सदस्य	கிராமவாசி	गाँव वाला
பலத்த	जोरदार	மழை	वर्षा
கரை	किनारा, तट	உடை	टूटना
வெள்ளம்	बाढ़	புகு	प्रवेश करना
அறி	जानना	சேதம்	नुकसान

ஏற்படு	नुकसान आदि होना	முற்றிலும்	बिलकुल
விழுந்துவிடு	गिर जाना	சுவர்	दीवार
இடி	टूट जाना	கூரை	छत
கல்வீடு	ईटों से बना मकान	தப்பு	बचना
		தரை	फ़र्श, ज़मीन
உள்வாங்கு	धँसना	கோழி	मुर्गी
ஆடு	बकरा,बकरी	மாடு	गाय,बैल आदि
பன்றி	सुअर	பயிர்	फ़सल
நாசம்	नाश	உடனடி	तुरंत
பாதிப்பு	प्रभाव	மீள்	लौटना
விவசாயம்	कृषि	காளை	बैल
எருது	भैंसा	தொடர்பாக	सिलसिले में
தலைவர்	अध्यक्ष,नेता	ஆனாலும்	फिर भी
நஷ்டஈடு	क्षतिपूर्ति	கிட்டு	प्राप्त
போக்கு	दूरकरना	போராட்டம்	संघर्ष
உண்ணாவிரதம்	भूख हड़ताल	துவக்கு	शुरु कर ना
வேண்டிக்கொள்	प्रार्थना करना	நிவாரணம்	निवारण
லட்சக்கணக்கான	लाखों का	கவனி	ध्यान देना
தெரிவித்துக்கொள்	सूचना देना	எருமை	भैंस
சட்டப்பேரவை	विधान सभा	நஷ்டம்	नुकसान

अभ्यास

I पाठ के आधार पर प्रश्नों के उत्तर लिखिए।

1. எம்.எல்.ஏ வின் பெயர் என்ன ?
2. வெள்ளத்தால் கிராமத்திற்கு என்ன ஏற்பட்டது ?

3. எத்தனை வீடுகள் விழுந்துவிட்டன ?
4. கல் வீடுகள் என்ன ஆயின ?
5. வெள்ளத்தால் ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு ?

II कोष्ठक में दिए गए हिन्दी शब्दों के समान तमिल शब्दों से वाक्य पूरे कीजिए।

(बाढ़, जोरदार, पशु, क्षतिपूर्ति, कृषि, वर्षा)

1. போன மாதம் .... மழை பெய்தது.
2. .... கிராமத்திற்கு சேதம்.
3. ஏராளமான .... மாண்டன.
4. .... எருதுகள் இல்லை.
5. எங்களுக்கு .... கிடைக்கவில்லை.

III उदाहरण के अनुसार निम्न लिखित वाक्यों को बदलिए।

(क) **उदाहरण:** மழை பெய்தது. --> மழை பெய்கிறது.

1. வெள்ளம் வந்தது. ....
2. கரை உடைந்தது. ....
3. வீடு இடிந்தது. ....
4. சேதம் ஏற்பட்டது. ....

(ख) **उदाहरण:** வீடு விழுகிறது --> வீடு விழுந்தது.

1. மரம் சாய்கிறது. ....
2. தூண் அசைகிறது. ....
3. மாடு மேய்கிறது. ....
4. ஆடு நனைகிறது. ....

(ग) **उदाहरण:** நான் எழுதுகிறேன் --> நான் எழுதினேன்.

1. நீ வருகிறாய். ....
2. அவன் இருக்கிறான். ....
3. அவள் படிக்கிறாள். ....
4. முகம் கழுவுகிறாள். ....

IV उदाहरण के अनुसार वाक्य बदलिए।

उदाहरण: மழை பெய்யும். --> மழை பெய்யவில்லை.

1. நஷ்டம் உண்டாகும். ....
2. பணம் கிடைக்கும். ....
3. சேதம் ஏற்படும். ....
4. மகஜர் எழுதுவோம். ....
5. உண்ணாவிரதம் இருப்போம். ....

V दिए गए हिन्दी शब्दों के समान तमिल शब्द लिखिए।

फ़सल	प्रभाव	शुरु करना	नेता
विधान सभा	दुख	संघर्ष	अध्यक्ष
दिन	पेयजल	शादी	जीवन
व्यर्थ करना	मेहमान	बचत	सदस्य

VI दिए गए शब्दों को वाक्यों में प्रयोग कीजिए।

அறி	நிவாரணம்	ஆயிரக்கணக்கான
துவக்கு	தலைவர்	வீண்
சிக்கனம்	நஷ்டம்	பண்டிகை
வெள்ளம்	நஷ்டஈடு	அவசியம்

VII तमिल में अनुवाद कीजिए।

1. मैं आज बाज़ार की तरफ गया ।
2. मेरा मित्र भी मेरे साथ आया ।
3. हम दोनों ने होटल में कुछ खाया ।
4. फिर बाजार में कुछ खरीदा ।
5. आधे घंटे में घर लौटे ।
6. अच्छी तरकारी लाए ।
7. कुछ ताज़ा फल भी लाए ।
8. माँ ने अच्छी सब्ज़ी बनायी ।
9. मीठे सेब से उनहों ने कुछ मिठाई भी बनायी ।
10. खाना खाकर हम सब घर के सामनेवाले बाग में टहलने गए ।
11. हमारे दादा दादी भी हमारे साथ आए ।
12. हमारा पूरा दिन बहुत अच्छा गुज़रा ।

VIII *मथुरा* या *काशी* के बारे में दस वाक्य तमिल में लिखिए ।

14. செத்தும் கொடுத்தான் சீதக்காதி

ஒரு காலத்தில் தமிழ்நாட்டில் சையத் காதர் என்று ஒரு முஸ்லீம் இருந்தார். அவர் தமிழ்ப் புலவர்களைப் பெரிதும் ஆதரித்தார். 'கொடையில் கர்ணன்' என்று அவர் பெயர் எடுத்தார். அவர் பெயர் பெரிதும் பரவி எல்லோர் நாவிலும் தவழ்ந்தது. மருவி சீதக்காதி என்று திரிந்தது. அவரைப் பற்றி ஒரு கதை.

ஒரு சமயம் சையத் காதர் மிகவும் நோய்வாய்ப்பட்டார். சாவு எவருக்கும் உண்டல்லவா? சாவு அவரையுங் கொண்டது. உறவினர்களும், ஊரார்களும் கூடி அழுதனர். பின்னர் இஸ்லாமியச் சடங்கின்படி அவரது பூதவுடலைப் புதைத்துக் கல்லறை எழுப்பினர்.

இந்த விஷயம் ஒரு புலவருக்குத் தெரியாது. அவர் வழக்கம் போலச் சையத் காதர் அவர்களைப் பார்த்தால் பாட்டுப்பாடிப் பரிசும் பொருளும் பெறலாம் என்று அவர் வீடு வந்து சேர்ந்தார். அங்கே அவரது மரணச் செய்தி கேட்டுத் துடித்தார். அழுது புலம்பினார். அவருடைய கல்லறையை நோக்கி ஓடினார்.

"வள்ளலே! வந்தவர்க்கு வரையாது வழங்கினாயே. இனி என் போல் புலவர் என்ன செய்வார்கள்?" என்று புலம்பிப் பாடினார். என்ன ஆச்சரியம்! கல்லறையிலிருந்து சையத்காதரின் கை வெளிவந்தது. கையின்

ஒரு விரல் வானத்தை நோக்கி நீண்டது. அதில் ஒரு பொன் மோதிரம் மின்னியது. "புலவரே! இதோ, உன் கவிதைக்குப் பரிசு", என்று ஒரு குரல் கேட்டது.

புலவர் முதலில் திடுக்கிட்டுத் திகைத்தார். பின்னர் அவரது நாத் தழுதழுத்தது. "என் சீதக்காதி மன்னா! நீ செத்தும் கொடுத்தாயோ?" என்று உருகிக் கண்ணீர் விட்டார். அன்று முதல் சையத் காதர், "செத்தும் கொடுத்தான் சீதக்காதி" என்ற சிறப்புப்பெயரைப் பெற்றார். தமிழ் கூறும் நல்லுலகம் அவரை என்றென்றும் மறக்காது.

शब्दार्थ

வள்ளல்	दानी	புலவர்	कवि
திரி	परिवर्तित होना	ஒரு சமயம்	एक बार
சாவு	मौत	எவர்	कौन सा व्यक्ति
கொள்	लेना	ஊரார்	समाज के लोग
கூடு	इकट्ठा हो	சடங்கு	रस्म
பூதவுடல்	भौतिक शरीर	புதை	गाड़ना
கல்லறை	कब्र,मकबरा	எழுப்பு	निर्माण करना
விஷயம்	विषय	பெறு	प्राप्त करना
வந்து சேர்	आ पहुँचना	துடி	तड़पना
புலம்பு	विलाप करना	வெளிவா	बाहर आना
வரையாது	असीमित मात्र में	பொன்	सोना
மோதிரம்	अंगूठी	மின்னு	चमकना
பரிசு	पुरस्कार	குரல்	आवाज़

திகை	हैरान होना	உருகு	द्रवित होना
கண்ணீர் விடு	आँसू बहना	சிறப்புப்பெயர்	उपाधि
நல்	अच्छा	மற	भूल जाना
தவழ்	(बच्चें लहर आदि का) चलना	மருவு	परिवर्तित होना
நோய்வாய்ப்படு	बहुत बीमार हो		

अभ्यास

I पाठ के आधार पर प्रश्नों के उत्तर लिखिए ।

1. சையத் காதர் என்ற பெயர் எப்படித் திரிந்தது ?
2. புலவர் சையத் காதரின் வீட்டுக்கு எதற்காகப் போனார் ?
3. புலவர் எப்படிப் புலம்பி அழுதார் ?
4. புலவர் புலம்பி அழுததும் என்ன நடந்தது ?
5. சையத் காதர் பெற்றச் சிறப்புப் பெயர் என்ன ?

II उदाहरण के अनुसार निम्न लिखित शब्दों को लिखिए।

(क) उदाहरण: சா → செத்து → செத்தும்

போ வா தூங்கு
இரு பிடி வாங்கு
ஆதரி

(ख) उदाहरण: செய் → செய்யாமல் → செய்யாமலும்

எழுப்பு சாப்பிடு கூப்பிடு
வாங்கு திற புலம்பு ஓடு

III रेखांकित शब्दों के बदले नीचे दिए गए शब्दों का प्रयोग करके वाक्य फिर से लिखिए ।

1. சாவு அவரையும் கொண்டது.
   (எல்லார்,இவர், அனைவர், சையத் காதர்)
2. அவருடைய கல்லறை நோக்கி ஓடினார்.
   (போ, வா, வணங்கு, பாடு)
3. உறவினர்களும் ஊரார்களும் கூடி அழுதனர்.
   (வணங்கு, கதறு, மனம்கலங்கு, சத்தம் போடு)

IV उदाहरण के अनुसार वाक्यों को जोड़कर लिखिए ।

उदाहरण: நான் வந்தேன். குளித்தேன். சாப்பிட்டேன்.
நான் வந்து குளித்துச் சாப்பிட்டேன்.

1. பெயர் பரவியது. எல்லார் நாவிலும் தவழ்ந்தது.
2. மருவியது. சீதக்காதி என்று திரிந்தது.
3. குழந்தை பயந்தது. சத்தம் போட்டது. அழுதது.
4. மரணச் செய்தியைக் கேட்டார். அழுதார். புலம்பினார்.
5. புலவர் திடுகிட்டார். திகைத்தார்.

V उदाहरण के अनुसार वाक्यों को छोटे छोटे वाक्यों मे बदलिए।

उदाहरण: நான் கோயிலுக்குப் போய் சுவாமி தரிசனம் செய்து வீடு திரும்பினேன்.
→ நான் கோயிலுக்குப் போனேன். சுவாமி தரிசனம் செய்தேன். வீடு திரும்பினேன்.

1. புலவர் திடுக்கிட்டுத் திகைத்துக் கண்ணீர் விட்டு அழுதார்.
2. அவன் எழுந்து நடுங்கி பயந்து ஓடினான்.

3. அம்மா கமலத்துக்குத் தலை வாரிப் பூச்சூட்டிப் பொட்டு வைத்துப் பள்ளிக்கு அனுப்பினாள்.

VI उदाहरण के अनुसार शब्द 'பற்றி' प्रयोग करके वाक्यों को फिर से लिखिए ।

उदाहरण: எனக்கு மிஸ்ராவைத் தெரியும்.

→ எனக்கு மிஸ்ராவைப் பற்றி ஒன்றும் தெரியாது.

1. அவருக்குத் தமிழ் நாட்டைத் தெரியும்.
2. அவர்களுக்கு ராமனைத் தெரியும்.
3. அவளுக்குக் கந்தசாமியினுடைய அப்பாவைத் தெரியும்.
4. உங்களுக்குத் துளசிராமாயணம் தெரியுமா ?

VII उदाहरण के अनुसार दिए गए वाक्य बदलिए।

(क) उदाहरण: அவர் ஹிந்தி சினிமா பார்த்தார்.

→ அவர் ஹிந்தி சினிமா பார்க்கிறார்.

அவர் ஹிந்தி சினிமா பார்ப்பார்.

1. கந்தசாமி காய்கறி வாங்கினார்.
2. கமலம் கடைக்குப் போனாள்.
3. போலீஸ்காரர் திருடனைப் பிடித்தார்.
4. மிஸ்ரா வீட்டிற்கு வந்தார்.

(ख) उदाहरण: நான் கல்கத்தா போனேன்.

→ நான் கல்கத்தா போயிருக்கிறேன்.

நான் கல்கத்தா போயிருந்தேன்.

நான் கல்கத்தா போயிருப்பேன்.

1. அவன் மதுரைக்குப் போனான்.
2. அவள் கமலாவைப் பார்த்தாள்.
3. அம்மா பொங்கல் செய்தாள்.
4. நீங்கள் கதை படித்தீர்கள்.

VIII तमिल में अनुवाद कीजिए।

कल मैं ने एक सिनेमा देखा। सिनेमा बहुत बढ़िया था । लेकिन मैं अकेला गया था । इसलिए आनंद उठा नहीं पाया । कहानी तो अच्छी थी। सब अभिनेताओं ने अपने अपने पात्र अच्छी तरह किए थे । गोने तो केवल दो ही थे। दोनों बहुत अच्छे थे । संगीत अलौकिक था । फिर भी अकेला होने के कारण बीच बीच में बहुत बोर हुआ।

मेरा मित्र अशोक अपने गाँव गया था । उस के आने के बाद उसे भी साथ लेकर और एक बार मैं वही सिनेमा देखूँगा ।

IX अपने पसंद के किसी *नेता के बारे* में दस वाक्य तमिल में लिखिए।

15. காற்று உள்ளபோதே தூற்றிக்கொள்

ஒரு கிராமத்தில் ஒரு வாரமாக ஓயாத பலத்த மழை. புயல்காற்று வேறு. புயலில் பெரிய பெரிய மரங்கள் எல்லாம் வேரோடு சாய்ந்துவிட்டன. ஏரியின் கரை உடைய ஆரம்பித்தது. வெள்ளம் கிராமத்திற்குள் புக ஆரம்பித்தது. வீட்டுக் கூரைகள் காற்றில் பறக்க ஆரம்பித்தன. எப்போது வேண்டுமானாலும் வீடுகள் இடிந்து விழலாம் என்ற நிலை.

"இன்னும் இந்தக் கிராமத்தில் இருந்தால் வெள்ளத்தில் இறந்துபோய்விடுவோம் என்று மக்கள் பயந்தனர். தங்கள் உடைமைகளை எல்லாம் மூட்டையாகக் கட்டிக்கொண்டும் மாடு கன்றுகளைப் பிடித்துக்கொண்டும் ஊரைவிட்டு வெளியேற ஆரம்பித்தார்கள். ஆனால் ஒரே ஒருவன் மட்டும் "நான் உங்களைப் போல் பயந்து ஓடமாட்டேன். நான் கடவுளை நம்புகிறவன். என் கடவுள் என்னைக் கைவிடமாட்டார். தன்னை நம்புகிறவர்களைக் காப்பாற்றுபவர் அவர். கடவுள், பக்தனாகிய என்னை எப்படியும் காப்பாற்றுவார்", என்று சொல்லிக்கொண்டு அங்கேயே தங்கிவிட்டான். தீவிர பிரார்த்தனையில் ஈடுபடலானான்.

அன்றிரவே கிராமத்தில் வெள்ளம் புகுந்துவிட்டது. பக்தனின் வீட்டுக்குள்ளும் வெள்ளம். அவன் வீட்டின் கூரைமீது நின்றுகொண்டு கடவுளைப் பிரார்த்திக்கிறான்.

அப்போது பக்கத்துக் கிராமத்தினர் படகில் அவ்வழியாகச் செல்கின்றனர். கூரைமீது தத்தளித்துக்கொண்டிருக்கும் பக்தனைப் பார்த்து "எங்களுடன் வந்துவிடு" என்று அழைக்கின்றனர். அதற்கு அந்த பக்தன் "நான் வரமாட்டேன். என் கடவுள் என்னைக் காப்பற்றுவார்", என்று சொல்லி அங்கேயே உட்கார்ந்து விடுகிறான்.

ஏரியின் கரை இன்னும் உடைய ஆரம்பித்தது. வெள்ளம் அதிகமாகிறது. வெள்ளம் கூரை அளவுக்கு உயர ஆரம்பித்தது. பக்தன் பக்கத்திலிருந்த மரத்தில் ஏறிக்கொண்டு கடவுள் வந்து காப்பாற்றுவார் என்று நம்பிக்கையோடு காத்திருக்கிறான். அப்போது இன்னொரு கிராமத்திலிருந்து மக்களுடன் வேறொரு படகு வருகிறது. மரத்தின் மேல் இருக்கும் பக்தனைப் பார்த்து "எங்களுடன் வந்துவிடு" என்று அவர்கள் கூப்பிடுகிறார்கள். ஆனால் இம்முறையும் பக்தன் மறுத்துவிடுகிறான். அவன் பிரார்த்தனை இன்னும் தீவிரமடைந்தது.

அடுத்த நாள் ஏரி முழுவதுமாக உடைந்துவிட்டது. பக்தன் ஏறியிருக்கும் மரத்தின் உச்சிவரை வெள்ளம் உயருகிறது. அக்கம்பக்கத்துக் கிராம மக்களை ஏற்றிக்கொண்டு கடைசியாக ஒரு படகு போகிறது. படகில் இருப்பவர்கள் பக்தனைத் தங்களுடன் வந்துவிடுமாறு வற்புறுத்துகிறார்கள். பக்தனோ மசிய-வில்லை.

சிறிது நேரத்தில் வெள்ளம் இன்னும் அதிகமாயிற்று. பக்தன் நீரில் மூழ்கி இறந்துவிடுகிறான். மேலுலகத்திற்குப் போன அவன் கடவுளைச் சந்திக்கிறான். "கடவுளே! நான் செய்யாத பூஜை இல்லை. பார்க்காத கோயில் இல்லை. உங்களை நான் முழுவதுமாக நம்பியிருந்தேன். கடைசி நேரத்தில் கூட உங்கள் பெயரையே ஜபித்துக்கொண்டிருந்தேன். ஆனால் என்னைக் கைவிட்டுவிட்டீர்களே, இது நியாயமா?", என்று கேட்டான்.

நிதானமாகக் கடவுள் சொன்னார், "பக்தா! உன் பக்தியில் குறை ஒன்றும் இல்லை. அதனால்தான் உன் முதல் பிரார்த்தனையைக் கேட்டவுடனேயே உனக்காக அடுத்தடுத்து மூன்று படகுகளை அனுப்பினேன். நீதான் வந்த மூன்று சந்தர்ப்பங்களையும் நழுவவிட்டுவிட்டாய். `காற்று உள்ளபோதே தூற்றிக்கொள்', என்ற பழமொழி உனக்கு ஏன் தெரியாமல் போயிற்று ? ".

शब्दार्थ

ஓயாத	लगातार	புயல்	तूफान, आँधी
வேர்	जड़	சாய்	जड़ से गिरना
ஏரி	जलाशय	இறந்து போ	मरना
உடைமை	संपत्ती	பயந்து போ	डरना
நம்பு	विश्वास करना	கைவிடு	छोड़ना
காப்பாற்று	रक्षा करना	தங்கி விடு	ठहरना
தீவிரம்	तीव्रता	பிரார்த்தனை	प्रार्थना

படகு	नाव	தத்தளி	तड़पना
அதிகமாகு	ज्यादा होना	நம்பிக்கை	भरोसा
காத்திரு	इंतज़ार करना	மறுத்துவிடு	इन्कार करना
உச்சி	चोटी	உயர்	बढ़ना, ज्यादा होना
வற்புறுத்து	ज़बरदस्त करना	நியாயம்	न्याय
மசியவில்லை	अस्वीकार करना	சந்தி	मुलाकात करना
ஜபி	स्मरण करना	சந்தர்ப்பம்	मौका
விட்டுவிடு	छोड़ना	பழமொழி	कहावत

अभ्यास

I पाठ के आधार पर प्रश्नों के उत्तर लिखिए।

1. வெள்ளத்தில் இருந்து தப்பிக்கப் பக்தன் ஏன் முயற்சி செய்யவில்லை ?
2. வெள்ளத்தில் இருந்து தப்பிக்கப் பக்தனுக்கு எத்தனை அவகாசம் கிடைத்தது ?
3. கடவுளைச் சந்தித்த பக்தன் அவரிடம் என்ன கேட்டான் ?
4. பக்தன் கேட்டதற்குக் கடவுள் அளித்த பதில் என்ன ?

II कोष्ठक में दिए गए शब्दों में से उपयुक्त शब्द चुनकर वाक्य पूरे कीजिए।

(சூற்றிக்கொள். படகுகள், நம்பிக்கை; பலத்த, கைவிட, ஜபித்து)

1. ஓயாத .... மழை பெய்துகொண்டிருந்தது.

2. கடவுள் ஒருபோதும் என்னைக் .... மாட்டார்.
3. பக்தன் .... யுடன் காத்திருந்தான்.
4. உங்கள் பெயரையே .... க்கொண்டிருந்தேன்.
5. காற்று உள்ளபோதே ....
6. உனக்காக மூன்று .... அனுப்பிவைத்தேன்.

III दिए गए तमिल शब्दों के समान हिन्दी शब्द चुनकर लिखिए।

பயம்	மழை	ஏரி	கிராமம்
படகு	போ	சண்டை	தீர்மானம்
வெயில்	மறு	பழமொழி	கஷ்டம்
புயல்	இற	சந்தர்ப்பம்	

जलाशय	मौका	डर	वर्षा
ग्राम	चल	नाव	इन्कार करना
मरना	धूप	निर्णय	झगड़ा
तूफान	कहावत	कठिनाई	

IV नीचे दिए गए तमिल शब्दों के समान हिन्दी शब्द लिखिए।

கடவுள்	நம்பிக்கை	பழமொழி	காப்பாற்று
தத்தளி	படகு	மறுத்துவிடு	கைவிடு
தூக்கம்	பட்டியல்	மர உச்சி	வற்புறுத்து

V दिए गए शब्दों को अपने वाक्यों में वाक्य में प्रयोग कीजिए।

பிரார்த்தனை	புயல்	விலாசம்
மர உச்சி	வெள்ளம்	கைவிடு

பயந்து ஓடு	காப்பாற்று	அவ்வழியாக
நம்பிக்கை வை	காத்திரு	மறுத்துவிடு

VI उधाहरण के अनुसार वाक्य बदलिए

(क) **उधाहरण:** கடவுளைப் பிரார்த்திக்கிறான்.

--> கடவுளைப் பிரார்த்திக்கவில்லை.
கடவுளைப் பிரார்த்திக்கமாட்டான்.

1. கிராம மக்கள் படகில் சென்றனர்.
2. கிடைத்த சந்தர்ப்பத்தை விட்டுவிட்டான்.
3. கடவுளை நம்பியிருந்தான்.
4. மூர்த்தி மிஸ்ராவைப் பார்த்தார்.
5. நான் பாடம் படித்தேன்.

(ख) **उधाहरण:** பலமாக மழை பெய்தது.

--> பலமாகப் பெய்த மழை.

1. வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின.
2. மரங்கள் வேரோடு சாய்ந்தன.
3. பக்தன் நம்பிக்கையோடு காத்திருந்தான்.
4. வெள்ளம் ஊருக்குள் புகுந்தது.
5. கிராம மக்கள் உயிர் தப்பினர்.

VII तमिल में अनुवाद कीजिए।

ईश्वर पर भरोसा रखिए। उनका नाम स्मरण कीजिए। मन को शांति मिलेगी। लेकिन सिर्फ पूजा पाठ से कुछ नहीं होगा। हर एक व्यक्ति को अपना अपना कर्तव्य निभाना चाहिए। कर्तव्य निभाते रहना ।

फल के पीछे नहीं पड़ना चाहिए। गीता में भी यही बात कही गयी है। तुम्हारा लक्ष्य कुछ भी हो उसको पाने के लिए दिन रात काम करना चाहिए। यही ईश्वर की पूजा है। यही हमें आश्वासन देता है।

VIII अपने *गाँव या शहर* के एक *मंदिर* के बारे में दस वाक्य तमिल में लिखिए ।

16. இண்டர்வியூ

காலை நேரம். அலுவலகம் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருந்தது .

ராமசாமிக்கு அதுதான் முதல் இண்டர்வியூ. வீட்டை விட்டுப் புறப்படும்போதே தனக்கு அந்த ஓட்டுநர் வேலை எப்படியும் கிடைத்துவிடும் என்று எண்ணித்தான் வந்தான். அவனுடைய அப்பாவும் " இந்த முறையாவது இண்டர்வியூவை நல்லபடிச் செய்", என்று ஆசிகூறி அனுப்பி வைத்தார்.

ராமசாமி மட்டுந்தான் சரியான சமயத்தில் இண்டர்வியூவிற்கு ஆஜராகியிருந்தான். அவனை முதலில் பார்த்தவர் அங்கிருந்த ஒரு வயதான மனிதர்தான். இண்டர்வியூவுக்கான நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. வரவேற்பறையில் உட்கார்ந்திருந்த ராமசாமிக்கு உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது.

அந்த நேரத்தில் வெள்ளையுடை அணிந்து ஒருவர் உள்ளே நுழைந்தார். வந்தவர்தான் கம்பெனியின் உரிமையாளர் என்றெண்ணி இண்டர்வியூவுக்கு வந்திருந்தவர்கள் எல்லோரும் எழுந்து நின்று வணக்கம் கூறினர். பிறகு வேறொரு வெள்ளைச் சட்டைக்காரர் உள்ளே நுழைந்தார். எல்லோரையும் ஒரு நோட்டம் பார்த்தார். "உங்கள் சான்றிதழ்களை எல்லாம் எடுத்துவையுங்கள்," என்று கூறிவிட்டுத் தன்னைக்

கம்பெனியின் ஓர் அலுவலர் என்று அறிமுகம் செய்துகொண்டு போய்விட்டார். அதன் பிறகு கண்ணாடி யணிந்து மிடுக்காக இன்னொரு நபர் வந்தார். மறுபடியும் எல்லோரும் எழுந்து நின்று வணக்கம் போட்டு வைத்தனர்.

இன்னும் ஐந்து நிமிடத்தில் இண்டர்வியூ நடக்கும் என்று கூறிவிட்டு வந்த குமாஸ்தா சென்றுவிட்டார். ராமசாமிக்கோ இருப்புக்கொள்ளவில்லை. எல்லோருக்கும் எழுந்து நின்று வணக்கஞ் சொல்லிச்சொல்லி அலுத்துப்போனான்.

'இன்னும் யார்யார் வந்துபோகப் போகிறார்களோ?' என்று சலித்துகொண்டான். அப்போது வயதான ஒரு மனிதர் வந்தார். "இவர் என்ன சொல்லிவைக்கப் போகிறாரோ?" என்று எண்ணிய ராமசாமி எழுந்து நிற்காமல் உட்கார்ந்த இடத்திலேயே இருந்துவிட்டான்.

வந்தவர், எல்லோரையும் பார்த்து வணக்கம் சொன்னார். உடனே ராமசாமி, "நீங்கள் சொல்வதைச் சொல்லிவிட்டுப் போங்கள்," என்று கூறினான். அதற்கு அந்த வயதானவர், "நான் தான் இந்தக் கம்பெனியின் உரிமையாளர்," என்று கூறினார். ராமசாமிக்குச்

சுரீரென்றது. உடனே எழுந்து நின்று வணங்கித் தன் நடத்தைக்காக வருந்தினான். உரிமையாளரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டான்.

கம்பெனியின் உரிமையாளர் ராமசாமியிடம், "நீ ஒருவன்தான் குறிப்பிட்ட நேரத்தில் வந்திருந்தாய். உன் சான்றிதழ்களை எல்லாம் ஆபீஸில் கொடுத்துவை. உனக்குத் தான் வேலை. என்னை வீட்டில் வந்து பார்த்துவிட்டுப் போ," என்று கூறினார். "ஆளைப் பார்த்து எடைபோடுவதை இன்றோடு நிறுத்திக்கொள்", என்றும் அறிவுரை கூறினார்.

"உங்கள் வண்டியை என் சொந்த வண்டியைப் போலவே எண்ணி எச்சரிக்கையுடன் ஓட்டுவேன்," என்றான் ராமசாமி. அதற்குப் பெரியவர், "வண்டி, நான் விலைபோட்டு வாங்கினது. அதை உன் வண்டி என்று எண்ணாமல் என் வண்டியாகவே நினைத்து ஓட்டு. புரிகிறதா ?" என்று சொல்லிச் சிரித்தார்.

ராமசாமி அசட்டுச் சிரிப்புடன் தலையைச் சொறிந்து கொண்டான். தன்னை வேலையில் அமர்த்தியதற்காகப் பெரியவருக்கு நன்றி கூறினான். மகிழ்ச்சி பொங்கத் தன் வீட்டிற்குப் புறப்பட்டான்.

शब्दार्थ

அலுவலகம்	दफ़्तर	இண்டர்வியூ	भेंट वार्ता
தனக்கு	खुद को	ஓட்டுனர்	वाहनचालक
போய்ச்சேர்	जा पहुँचना	வயதானவர்	बुजुर्ग
வரவேற்பறை	स्वागत स्थान	உடை	लिबास
உரிமையாளர்	मालिक	நில்	खड़े होना
அலுவலர்	बाबू	அறிமுகம்	परिचय
கண்ணாடி	चश्मा	மிடுக்கு	ठीक-ठाक
நபர்	व्यक्ति	மறுபடி	फिर
குமாஸ்தா	बाबू	இருப்புக்கொள்	रहा (न) जाना
அலுப்பு	थकना	ஏமாற்று	धोखा देना
நடத்தை	चालचलन	மன்னிப்புக்கேள்	माफ़ी माँगना
அறிவுரை	समझाना	எச்சரிக்கை	चेतावनी
குறிப்பிட்ட	उल्लेखित	வந்துபார்	आकर देखना
சிரி	हँसना	நன்றி	धन्यवाद
பெரியவர்	बुजुर्ग	எடைபோடு	अंदाज़ा लगाना
மகிழ்ச்சி	खुशी		

अभ्यास

I पाठ के आधार पर निम्न लिखित प्रश्नों के उत्तर लिखिए।

1. எந்த வேலைக்காக ராமசாமிக்கு இண்டர்வியூ ?
2. ராமசாமிக்கு வேலை கிடைத்ததா ?
3. ராமசாமி பெரியவரிடம் எதற்காக மன்னிப்புக் கேட்டான் ?

4. "ஆளைப் பார்த்து எடை போடாதே" என்று பெரியவர் ராமசாமிக்குச் சொன்னது ஏன் ?

II दिए गए शब्दों मे से पाठ में आए हुए शब्द लिख लीजिए।

இண்டர்வியூ	வயதானவர்	ஓட்டுனர்
மளிகைக்கடை	வியாபாரம்	மன்னிப்பு
ஆசிரியர்	மிடுக்கு	கவிதை
அலுவலர்	நுழை	ஆள்
நபர்	பெற்றோர்	எடுத்துவை
எச்சரிக்கை	வெள்ளம்	எடைபோடு

III दिए गए शब्दों के समान हिन्दी शब्द लिख लीजिए।

நன்றி	எச்சரிக்கை	அலுவலகம்
உரிமையாளர்	வேறொரு	எடைபோடு
வண்டி	கண்ணாடி	ஓட்டு
ஓட்டுனர்	மிடுக்கு	பெரியவர்
நிறுத்திக்கொள்	வணங்கு	நடத்தை
மகிழ்ச்சி		

IV दिए गए शब्दों को अपने वाक्यों में प्रयोग कीजिए ।

வணக்கம் சொல்	போய்விடு	எழுந்து நில்
மன்னிப்புக் கேள்	நடந்துகொள்	புரிகிறது
எச்சரிக்கை	அலுவலர்	
மறுபடியும்		

V उपयुक्त शब्द चुनकर वाक्य पूरे कीजिए ।

1. ராமசாமியை முதலில் பார்த்தது அங்கிருந்த ஒரு .... (வயதான மனிதர்/இளைஞர்).
2. ராமசாமிக்கு உடம்பெல்லாம் .... (நடுங்கியது/ வியர்த்தது).
3. பெரியவர் "நான் தான் இக்கம்பெனியின் .... என்றார். (அலுவலர்/உரிமையாளர்).
4. வண்டி நான் விலை போட்டு .... (வாங்கியது/ கொடுத்தது).
5. உன் சான்றிதழ்களை ஆபீஸில் .... (கொடு/ வாங்கு)

VI तमिल में अनुवाद कीजिए।

कोई माँ बच्चे को सुला रही है। मधुर लोरी (lullabi) की आवाज़ आ रही है। कितनी अच्छी लगती है। यह लोरी एक पुरानी कहानी बताती है। अपने बच्चे के लिए एक माँ क्या क्या काम करती है, उसके बारे में इस लोरी में कहानी के रूप में बताया गया है। मेरी नानी ने इस लोरी के शब्द मुझे भेज दिए थे। अपने बच्चों को इस लोरी से मैं भी सुलाया करती थी। मैं अपनी बेटी को भी यह गीत सिखाथी हूँ।

VII अपने *बचपन के बारे* में दस वाक्य तमिल में लिखिए।

17. தமக்கென வாழாத திரு.வி.க.

அப்போது திரு.வி.க. புராணப்பிரசங்கம் செய்து கொண்டிருந்தார். சிவனடியார் சிலர் ஒன்றுகூடி திரு.வி.க.வுக்கு ஓர் உருத்திராட்ச மாலையைப் பரிசாக வழங்கினர். அது தங்க உருத்திராட்ச மாலை. நல்ல விலை மதிப்புள்ளது. அதை எப்போதும் திரு.வி.க. அணிந்து கொள்வது வழக்கம். ஒரு நாள் உருத்திராட்ச மாலையை அணிந்துகொண்ட வண்ணம் நீராடச் சென்றார். கரையிலே கழற்றி வைத்துவிட்டு ஆற்றிலே நீராடினார். நீராடியபின் எழுந்தார். உருத்திராட்ச மாலையைக் கழற்றி வைத்த நினைவே அவருக்கு இல்லை. வீட்டிற்கு வந்ததும் நினைப்பு வந்தது. அன்பர்கள் ஓடினார்கள். தேடினார்கள். உருத்திராட்ச மாலை கிடைக்கவில்லை. திரு.வி.க.வுக்கு அது போனது பற்றிக் கவலையே இல்லை. ஆனால் அடியார் திருக்கூட்டம் மிகவும் வருந்தியது.

"என்ன இது. அன்புடன் நாம் ஒரு மாலை அணிவித்தோம். அது இப்படிக் காணாது போயிற்றே", என்று அன்பர்கள் கலங்கினர். பின்னர் மறுபடி முயன்று அதே போல் விலையுயர்ந்த மாலை மற்றொன்றைச் செய்து அவருக்கு அணிவித்தனர். அன்பரின் விருப்பத்தைத் தட்ட மனமில்லாமல் ஆசிரியர் அதை ஏற்றுக்கொண்டார். அதன்பின் எப்போதும் அவர் அம்மாலையை அணிவதில்லை.

நாட்கள் பல கடந்தன. திரு.வி.க.வின் நண்பர் ஒருவர் அவரிடம் வந்தார். "கல்யாண சுந்தரம். நான் இப்போது ரொம்பக் கஷ்டப்படுகிறேன். உன்னிடம் ஐந்து ரூபாய் இருந்து கொடுத்தால் ரொம்ப நல்லது என்று கூறினார். திரு.வி.க. விடம் அப்போது ஒரு சல்லிக் காசுகூட இல்லை. என்ன செய்வார்? நன்பருக்கு இல்லை என்று சொல்ல மனம் வரவில்லை. உள்ளே சென்றார். தமது பெட்டியைத் திறந்தார். அந்த உருத்திராட்ச மாலையை எடுத்து வந்தார்.

"நண்பா! இப்போது என்னிடம் காலணாக்கூட இல்லை. என்ன செய்வேன்? இந்த உலகத்திலே தற்போது எனது ஒரே ஓர் உடைமை இந்த உருத்திராட்ச மாலை தான். இதை நீ எடுத்து விற்றுக்கொள்", என்று கூறிக் கொடுத்துவிட்டார்.

அன்பர்கள் அளித்த பொருளாயிற்றே! ஒரு முறை காணாது போய் மறுபடி செய்ததே! இது நமக்கு வேண்டுமே! என்ற எண்ணம் சிறிதும் அவர் மனத்தில் இல்லை. இவரே தமக்கென வாழாது பிறருக்கு உரியரானார்.

शब्दार्थ

புராணம்	पुराण	பிரசங்கம்	भाषण
சிவன்	शिव	அடியார்	भक्त

உருத்திராட்சம்	रुद्राक्ष	மாலை	माला
தங்கம்	सोना	அணிந்துகொள்	पहनना
ஆறு	नदी	கரை	किनारा
நினைவு	याद	தேடு	ढूँढना
வருந்து	पछताना	காணாது போ	गायब होना
முயல்	प्रयत्न करना	மற்றொன்று	दूसरा
அணிவி	पहनाना	எப்போதும்	हमेशा
பெட்டி	बक्सा	திற	खोल
எடுத்து வா	ले आना	விற்றுக்கொள்	बेचना
கஷ்டப்படு	तकलीफ उठाना	உடைமை	संपत्ति,जायदाद
தற்போது	अब	சல்லி	पैसे(पुराने जमाने के)
காலணா	पुराने जमाने का एक सिक्का,लगभग दो न.पै.के बराबर का एक सिक्का		

अभ्यास

I पाठ के आधार पर निम्न लिखित प्रश्नों के उत्तर लिखिए।

1. பரிசாக திரு.வி.க வுக்கு என்ன வழங்கப்பட்டது ?
2. அன்பர்கள் திரு.வி.கவுக்கு வேறொரு மாலை அணிவித்தது ஏன் ?
3. திரு.வி.க வின் நண்பர் அவரிடம் என்ன கேட்டார் ?
4. திரு.வி.க. தம் நண்பருக்கு எப்படி உதவினார் ?

II उदाहरण के अनुसार शब्दों को विग्रह कीजिए।

उदाहरण: சிவனடியார் ---> சிவன் + அடியார்

1. திருக்கூட்டம் = ... + ...
2. மனமின்றி = ... + ...
3. அணிவதில்லை = ... + ...
4. மதிப்புள்ளது = ... + ...
5. ஐநூறு = ... + ...
6. உன்னிடம் = ... + ...
7. வரவில்லை = ... + ...
8. மற்றொன்று = ... + ...

III उदाहरण के अनुसार नए शब्द को लिखिए।

(क) उदाहरण: படி ---> படிப்பு

நினை	=	....	மதி	=	....
நட	=	....	உடு	=	....
வெறு	=	....	சிரி	=	....
சேமி	=	....	வளர்	=	....
பிடி	=	....	நடி	=	....
எதிர்	=	....	பிற	=	....

(ख) उदाहरण: பழகு ---> பழக்கம்

நோக்கு	=	....	தூங்கு	=	....
எண்ணு	=	....	விளக்கு	=	....
ஓடு	=	....	ஆடு	=	....
தேக்கு	=	....	விரும்பு	=	....
ஏங்கு	=	....	திருப்பு	=	....
ஏறு	=	....	நடுங்கு	=	....

IV दिए गए तमिल शब्दों के समान हिन्दी शब्द लिखिए।

புராணம்	அணிந்து கொள்	எப்போதும்
எடுத்து வா	ஏழை	அனுப்பு
சம்மதி	சில்லரை	தற்போது
காணாது போ	ஆற்றங்கரை	பிரசங்கம்

V उदाहरण के अनुसार वाक्यों को लिखिए।

उदाहरण: நாம் எல்லோரும் ஒன்று கூடி ஆடுவோம்
நாம் எல்லோரும் ஒன்று கூடுவோம்.
ஆடுவோம்.

1. சிவனடியார் ஒன்றுகூடி அவருக்கொரு மாலையை வழங்கினார்.
2. கரையிலே கழற்றி வைத்துவிட்டு ஆற்றிலே நீராடினார்.
3. உள்ளே சென்று பெட்டியைத் திறந்து மாலையை எடுத்தார்.

VI उपयुक्त शब्द चुनकर वाक्य पूरे कीजिए।

1. நாங்கள் கல்லூரிக்கு .... படித்தோம். (போன, போய், போகும்)
2. நாம் ஆசிரியர் .... வரை காத்திருப்போம். (வந்து, வந்த, வரும்)
3. நீ எப்போது இதை .... முடிப்பாய் ? (எழுதி, எழுத , எழுதும்)

4. அவர்கள் பேசிக்கொண்டிருக்கும் .... நாங்கள் உள்ளே போனோம். (உடனே, போது, பிறகு)

VII उपयुक्त शब्दों से वाक्य पूरे कीजिए।

(உடைமை, நண்பர், சல்லிக்காசு, தட்ட, பிரசங்கம், கஷ்டத்தில், மாலையை)

1. திரு.வி.க. .... செய்து கொண்டிருந்தார்.
2. அன்பரின் விருப்பத்தைத் .... மனமின்றி ஆசிரியர் .... ஏற்றுக்கொண்டார்.
3. திரு.வி.க.வின் .... ஒருவர் மிகவும் .... இருந்தார்.
4. அப்போது அவரிடம் ஒரு .... கூட இல்லை.
5. எனது ஒரே ஓர் .... இந்த மாலைதான்.

VIII उदाहरण के अनुसार वाक्य बदलिए।

(क) उदाहरण: நான் குளிக்கிறேன்.

---> நான் குளித்துக்கொண்டிருக்கிறேன்.

1. அவர்கள் பாடம் எழுதுகிறார்கள்.
2. நாங்கள் ஹிந்தி படிக்கிறோம்.
3. நீங்கள் என்ன செய்கிறீர்கள் ?

(ख) उदाहरण: நீ குளித்துக் கொண்டிருக்கிறாய்.

---> நீ குளித்துக் கொண்டிருந்தாய்.

1. அவர் பேசிக் கொண்டிருக்கிறார்.
2. அவர் சாபிட்டுக்கொண்டிருக்கிறார்.
3. நாங்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறோம்.

(ग) **उदाहरण:** நான் வந்தேன் .---> நான் வந்ததில்லை.

1. அவர் டில்லிக்கு வந்தார்.
2. நாங்கள் கதை எழுதினோம்.
3. அவள் ராமாயணம் படித்தாள்.
4. நான் கான்பூர் போனேன்.

IX तमिल में अनुवाद कीजिए।

हमारे भारत में कई नेता लोग थे। लेकिन गाँधीजी जैसे महान व्यक्ति कोई भी नहीं। भारत देश की महिमा को गाँधीजी ने संसार को दिखाया और अहिंसा का महत्व सब को सिखाया। बहुत से देशवासी उनके दर्शन के लिए आते थे। कई महान लोगों ने उनसे पत्र व्यवहार द्वारा मार्ग दर्शन पाये थे। कई लोग उनसे प्रभावित होकर अपनी धन-दौलत छोड़कर लोगों की सेवा के लिए तैयार हुए।

X अपने *आदर्श व्यक्ति* के बारे में दस वाक्य लिखिए।

18. பலே திருடன்

(விக்கிரமாதித்யன் கதைகளில் ஒன்று)

ஒரு ஊரில் ஒரு திருடன் இருந்தான். அவன் கன்னம் வைப்பதில்லை. ஜன்னல்களைப் பெயர்ப்பதும் இல்லை. ஆனால் மிகத் தந்திரமாகத் திருடுவான்.

ஒரு நாள் அவன் ஒரு திருட்டு நடத்தத் திட்டம் போட்டான். நன்றாக உடுத்திக்கொண்டான். ஓட்டாஞ் சில்லியை எடுத்தான். வட்டமாக அதைத் தேய்த்துச் சட்டைப்பையில் போட்டுக்கொண்டான்.

நேராக அவன் ஒரு நாவிதன் கடைக்குப் போய் முகச் சவரம் செய்துவிடச் சொன்னான். சவரம் ஆயிற்று. மீசை, தாடி யெல்லாம் போய் திருடன் பளிச்சென்று ஆனான்.

அந்தக் காலம் அல்லவா? ஐந்து தம்பிடிதான் சவரக்கூலி. திருடன், "அடடா, என்னிடம் சில்லறை இல்லையே? முழு நாணயமாக இருக்கிறதே?" என்று சட்டைப் பையை மேலாகப் பிடித்துக்காட்டினான். சட்டைப்பையில் வட்டமாக ஒன்று தெரிந்தது. நாவிதன் அதை ரூபாய் நாணயம் என்று நம்பிவிட்டான். அந்தக் காலத்தில் ஒரு ரூபாய் என்பது மிகப் பெரிய விஷயம். ஒரு சாதாரண ஏழை நாவிதனிடம் ஒரு ரூபாய்க்குச் சில்லறை இருப்பது மிகவும் அரிது. நாவிதன்,

"அடேயப்பா! ஒரு ரூபாயா? என்னிடம் ஏது ஒரு ரூபாய்க்குச் சில்லறை?" என்றான்.

"சரி. உன் பையனை என்னுடன் அனுப்பு. ஒரு ரூபாய்க்குச் சில்லறை மாற்றி அவனிடம் கொடுத்து அனுப்புகிறேன்" என்றான் திருடன். நாவிதனும் சம்மதித்தான். தன் ஐந்து வயதுப் பையனை அவனுடன் அனுப்பி வைத்தான். திருடன் நாவிதனின் மகனை அழைத்துக்கொண்டு ஒரு ஜவுளிக்கடைக்குப் போனான். விலை உயர்ந்த புடவைகள், வேட்டிகள், சட்டைகள் மற்றும் பாவாடைத் துணிகள், ரவிக்கை துண்டுகள், சரிகை போட்ட தாவணிகள் எல்லாம் நிறைய எடுத்தான். நாவிதனின் பையன் கடைத் தெருவைப் பராக்கு பார்த்துக்கொண்டிருந்தான்.

திருடன் கடைக்காரரிடம் தான் பொறுக்கி எடுத்த துணிகளை எல்லாம் மூட்டையாகக் கட்டச்சொன்னான். பிறகு, "ஊருக்கு வெளியே வண்டியில் என் வீட்டுப் பெண்கள் இருக்கிறார்கள். கொண்டு போய் காட்டிவிட்டு வருகிறேன். நான் பொறுக்கியது அவர்களுக்கு பிடிக்கிறதோ இல்லையோ? பெண்கள் விஷயம் பாருங்கள். என் பையன் இங்கேயே இருக்கட்டும். இதோ வந்துவிடுகிறேன்." என்று சொன்னான்.

கடைக்காரனும் சம்மதித்தான். பையன் இன்னும் தெருவில் பராக்கு தான் பார்த்துக் கொண்டிருந்தான். திருடன் போயே போய்விட்டான்.

வெகுநேரமாயிற்று. கடைக்காரனுக்குச் சந்தேகம் வந்தது. "ஏய், உங்க அப்பா எங்கேடா?" என்று பையனைக் கேட்டான் கடைக்காரன். "எங்க அப்பா கடையில் சவரம் செய்துகொண்டு இருக்கிறார்", என்று பையன் சொன்னான். அதைக் கேட்டு கடைக்காரன் திடுக்கிட்டான். அலறியடித்துக்கொண்டு நாவிதன் கடைக்குப் போனான். அங்கே போன பிறகு தான் இரண்டு பேருமே ஏமார்ந்தது நாவிதனுக்கும், ஜவுளிக் கடைக்காரனுக்கும் தெரிந்தது. கடைக்காரன் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டான். வேறு என்ன செய்வது ?

शब्दार्थ

திருடன்	चोर	கன்னம்	सेंद
கதவு	दरवाज़ा	பெயர்	निकाल देना
மகா	बड़ा	தந்திரம்	चालाकी
திருடு	चुराना	திட்டம் போடு	योजना बनना
உடுத்திக்கொள்	पहन लेना	வட்டம்	गोल,वृत्ताकार
தேய்	रगड़ना	மூட்டை	बोरियाँ
சட்டைப்பை	जेब	போட்டுக்கொள்	डाल लेना
நாவிதன்	नाई	சவரம்	हजामत बनाना
மீசை	मूँछ	தாடி	दाढ़ी
கூலி	मज़दूरी	முழு	पूरा
சில்லறை	चिल्लर	மாற்று	बदलना

வயது	आयु	அனுப்பு	भेजना
புடவை	साड़ी	வேட்டி	धोती
சட்டை	कुर्ता,कमीज़	பாவாடை	लहंगा
பொறுக்கு	चुनना	சரிகை	ज़री
தாவாணி	छोटीधोती	எடு	लेना
பராக்குபார்	तमाशा देखना	திடுக்கிடு	चौंकना
ஜவுளிக்கடை	कपड़े की दुकान	உயர்ந்த	उन्नत,ऊँचा
ரவிக்கைத்துண்டு	स्त्रियों के ब्लाउज़ का कपड़ा		
ஓட்டாஞ்சில்லி	मिट्टी के बर्तन का छोटा टुकडा		

अभ्यास

I पाठ के आधार पर प्रश्नों के उत्तर लिखिए।

1. திருடன் ரூபாய் நாணயமாக எதை வைத்திருந்தான் ?
2. திருடன் நாவிதனை ஏமாற்றியது எப்படி ?
3. துணிகளை எல்லாம் எடுத்துக்கொண்ட திருடன் கடைக்காரரிடம் என்ன சொன்னான் ?
4. கடைக்காரனுக்குத் தான் ஏமார்ந்துபோன விஷயம் எப்படித் தெரிந்தது ?

II दिए गए हिन्दी शब्दों के समान तमिल शब्द लिखिए।

दूकानदार	नाई	चोर	मूँछ	बोरियाँ
पहनना	बेचना	चुनना	मज़दूरी	संपत्ति
लहंगा	चालाकी	धोती	आयु	चुराना

III दिए गए तमिल शब्दों के समान हिन्दी शब्द लिखिए।

விட்டுவிடு	அறிமுகம்	எடைபோடு
வேலையாள்	போராட்டம்	பொதுக்கூட்டம்
தேய்	திட்டம்	உடுத்து
சட்டைப்பை	எடு	திடுக்கிடு

IV कोष्ठक में दिए गए शब्दों का प्रयोग करके तीन-तीन नए वाक्य लिखिए।

1. என்னிடம் ஏது ஒரு ரூபாய்க்குச் சில்லறை ? (அவனிடம், அவர்களிடம், ஐந்து ரூபாய்)
2. ஒருநாள் அவன் ஒரு திருட்டு நடத்தத் திட்டம் போட்டான். (நாடகம், பொதுக்கூட்டம், கச்சேரி)
3. ஐந்து வயதுப் பையனை அவனுடன் அனுப்பிவைத்தான். (பத்து வயது, என்னுடன், கடை)
4. பையன் தெருவில் வேடிக்கை பார்த்துக்-கொண்டிருந்தான். (நாவிதன், நடப்பவர்கள், பள்ளியில்)

V उदाहरण के अनुसार वाक्य बदलिए।

(क) उदाहरण: திருடன் கன்னம் வைப்பதில்லை.
= கன்னம் வைக்காத திருடன்.

1. மிஸ்ரா கடைக்குப் போகவில்லை.
2. குமார் காப்பி குடிப்பதில்லை.
3. உஷா சினிமா பார்ப்பதில்லை.
4. கமலா பாடம் படிக்கவில்லை.

(ख) उदाहरण: அவன் தந்திரமாகத் திருடுவான்.
= அவன் தந்திரமாகத் திருடினான்.

1. ஒரு திருட்டு நடத்தத் திட்டம் போடுவான்.
2. நாவிதன் எல்லோரையும் நம்புவான்.
3. தன் பையனை அவனுடன் அனுப்புவான்.
4. சாமான்களை எல்லாம் திருடிக்கொண்டு போவான்.

(ग) उदाहरण: அவன் திட்டம் போட்டான்.
= அவன் திட்டம் போடவில்லை.

1. நாவிதன் அதை ரூபாய் நாணயமென்று நம்பினான்.
2. கடைக்காரன் அதற்குச் சம்மதித்தான்.
3. திருடன் ஜவுளிக்கடைக்குப் போனான்.
4. ஜவுளிக்கடைக்காரர் திடுக்கிட்டார்.

VI दिए गए शब्दों को वाक्यों में प्रयोग कीजिए।

நம்பிவிடு	போட்டுக்கொள்
எடுத்துக்கொள்	கொண்டுபோ
திடுக்கிடு	சொல்லிக்கொடு
பார்த்துக்கொண்டிரு	கொடுத்தனுப்பு
அழைத்துச் செல்	

VII `क' तथा `ख' वाक्यांशों को क्रम से लाकर वाक्य बनाइए।

	(क)	(ख)
1.	நாவிதன் அதை ரூபாய்	பையனிடம் கொடுத்தனுப்புகிறேன்.
2.	சில்லரை மாற்றி உன்	என்று நம்பினான்.

3.	பையன் தெருவில்	அனுப்பிவைத்தான்.
4.	நாவிதன் மகனை அழைத்துக்கொண்டு	வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான்.
5.	நாவிதன் தன் மகனை	ஜவுளிக்கடைக்குப் போனான்.

VIII तमिल में अनुवाद कीजिए।

कल रात मैं खूब सोया। दिन भर काम करता रहता था। एक महीने के लिए बाहर गया था। इसलिए बहुत काम रुक गया था। कई पत्र के उत्तर लिखना था। मेरी अनुपस्थिति में किसी ने भी मेरे कागज़ों की ओर नहीं देखा।एक दृष्टि से अच्छा ही हुआ। क्यों कि बहुत से पत्र ऐसे थे जिन को मेरे ही शब्दों की ज़रूरत थी। उत्तर लिखते लिखते रात के दस ग्यारह बज गये थे। उस के बाद नाम के वास्ते कुछ खाया। फ़िर बगीचे में टहलने निकला। लेकिन नींद मुझे बड़े रूम् की ओर खींचती थी। बिस्तर पर लेटते ही आँखें बंद हो गई। और उठा तब, जब पेपरवाले की साईकिल की आवाज़ सुनी।

IX *आरक्षण* या *पूछताछ* की खिड़की पर एक काल्पनिक संवाद तमिल में लिखिए।

19. கலை விழா

இந்த இனிய கலைவிழாவின் தலைவர் அவர்களே! பொறுப்பாளர்களே! பேரன்புகொண்ட பெரியோர்களே! தாய்மார்களே! மாணவ மணிகளே! அனைவருக்கும் என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு எனது உரையைத் தொடங்குகிறேன்.

இந்தக் கலை விழாவில் நீங்கள் பார்த்துப் பார்த்து ரசிக்கும் படியான பல நிகழ்ச்சிகள் உள்ளன. ஏறக்குறைய நான்கு மணி நேரம் வீட்டு வேலையை மறந்து புது உலகத்தில் சஞ்சரிக்கப் போகிறீர்கள். கலை அந்த அளவுக்கு வலிமையுள்ளது. நீங்கள் கூட்டம் கூட்டமாக வந்து இங்கே கூடியிருப்பது கலையின் மேல் உங்களுக்குள்ள ஆர்வத்தைக் காட்டுகிறது. தற்போது கொஞ்சம் கொஞ்சமாகக் கலை மக்களை விட்டு விலகிச் செல்கிறது என்று கூறுகிறார்கள். ஆனால் இங்கே நீங்கள் சாரிசாரியாக வந்து கொண்டிருப்பதைப் பார்க்கும்போது எனக்கு அப்படி நினைக்கத் தோன்றவில்லை.

இது மக்கள் கலை. மக்களின் வாழ்க்கையைப் பார்த்துப் பார்த்து வடித்து எடுக்கப்பட்ட கலை. உங்களின் பிரச்சினைகளைத் தேடித்தேடித் தொகுத்து இங்கே கலை வடிவத்தில் தரப்போகிறார்கள். அதைத்தான் இங்கே நாடகமாகவும், நாட்டியமாகவும் காணப்போகிறீர்கள். தெருக்கூத்து, காவடியாட்டம், கரகாட்டம், கோலாட்டம், பொம்மலாட்டம், பொய்க்கால் குதிரை என்று

எவ்வளவோ கிராமியக் கலை நிகழ்ச்சிகள்! மூன்று மணி நேரம் நடக்க இருக்கும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியைப் பார்க்காமல் விட்டுவிடாதீர்கள். எல்லாவற்றையும் கண்டுகளியுங்கள். தமிழ்நாட்டுக் கிராமியக் கலைகளை பட்டிதொட்டிகளில் எல்லாம் பரப்பும் நல்ல பணியை இங்கே வந்திருக்கும் இக்கலைக்குழுவினர் மேற்கொண்டுள்ளனர். அவர்களுக்கு ஆதரவு தருவது உங்கள் கடமையும் பொறுப்பும் ஆகும்.

ஓடி ஓடி உழைத்துக் களைத்த மக்களுக்கு கலை ஒரு பொழுதுபோக்கு. அத்துடன் நல்ல நல்ல கருத்துக்களைத் தர வேண்டிய பொறுப்பும் கலைஞர்களுக்கு உண்டு. அந்தப் பொறுப்பை இக் கலை விழாக் குழுவினர் செம்மையாக நிறைவேற்றுவார்கள் என்று நம்புகிறேன். இருபது ரூபாய் போனால் போகட்டும் என்று கட்டணம் செலுத்தி நீங்கள் கலையை ரசிக்க வந்திருக்கிறீர்கள். எனவே உங்களை அதிக நேரம் காக்க வைக்காமல் எனது உரையை இத்துடன் நிறைவு செய்கிறேன். நன்றி. வணக்கம்.

சொற்பொருள்

பொறுப்பாளர்	प्रभारी	அன்பு	प्रेम
தாய்மார்	माताएँ	உரை	भाषण
மகிழ்	आनंद उठाना	நாட்டியம்	नृत्य
பாடல்	गीत	சஞ்சரி	संचार करना
வலிமை	बल	கூடியிரு	जमा होना

ஆர்வம்	दिलचस्पी	விலகிச் செல்	दूर होना
வாழ்க்கை	जीवन	பிரச்சினை	समस्या
நாடகம்	नाटक	கலைஞர்	कलाकार
கிராமிய	ग्रामीण	பரப்பு	फैला देना
களி	आनंद लेना	பணி	कार्य
மேற்கொள்	जिम्मेदारी लेना	உழை	मेहनत करना
பொறுப்பு	उत्तरदायित्व	கட்டணம்	शुल्क
செலுத்து	जमा करना	காக்க வை	प्रतीक्षा करना
நிறைவு செய்	पूरा करना	ஆதரவு	सहारा
கடமை	कर्तव्य	கலைக்குழு	कलाकार
தொகு	एक साथ इकट्ठा करना	கலைவிழா	सांस्कृतिक कार्यक्रम

பயிற்சி

I வினாக்களுக்கு விடை தருக.

1. நீங்கள் நாட்டியமாகவும் நாடகமாகவும் எதைக் காணப்போகிறீர்கள் ?
2. தமிழ்நாட்டுக் கிராமியக் கலைகள் எவை ?
3. கலைஞர்களின் பொறுப்பு என்ன ?
4. கூட்டம் கூட்டமாக மக்கள் கூடியிருப்பது எதைக் காட்டுகிறது ?
5. ஓடி உழைக்கும் மக்களுக்கு பொழுதுபோக்கு எது ?

II தரப்பட்டுள்ள ஹிந்திச் சொற்களுக்குச் சமமான தமிழ்ச் சொற்களை எழுதுக.

प्रेम	गीत	सांस्कृतिक कार्यक्रम	जमा होना
इकट्ठा करना	समस्या	मेहनत करना	प्रतीक्षा करना
संचार करना	पूरा करना	दूर रहना	जमा करना

III தரப்பட்டுள்ள சொற்களை வாக்கியங்களில் பயன்படுத்தி எழுதுக.

கிராமியக் கலைகள்	பொழுதுபோக்கு
கட்டணம்	நிறைவேற்று
கொஞ்சம் கொஞ்சமாக	ஏறக்குறைய
விலகிச்செல்	பிரச்சினை
வீட்டுவேலை	தாய்மார்கள்
காக்கவை	தெரிவித்துக்கொள்

IV மாதிரியைப் பார்த்து வாக்கியங்களை மாற்றி எழுதுக.

மாதிரி: நான் பார்த்து எழுதினேன்.
நான் பார்த்துப் பார்த்து எழுதினேன்.

1. பாரதியார் பாட்டைக் கேட்டு மகிழலாம்.
2. அவள் சிரித்துப் பேசினாள்.
3. மக்கள் கூட்டமாக வந்தனர்.
4. நான் சொல்ல மிஸ்ரா எழுதினார்.
5. ரூபாய் நோட்டை எண்ணிப் பார்த்தேன்.

V தகுந்த சொற்களால் கோடிட்ட இடங்களை நிரப்புக.

(கூட்டமாக, பாடல்கள், கட்டணம், கேட்டு, ஆர்வத்தை, கலை, போகட்டும், ஓடி ஓடி)

1. நீங்கள் கூட்டம் .... வந்துகொண்டிருந்தீர்கள்.
2. கேட்டுக் .... மகிழும்படியான பல .... உள்ளன.
3. தினமும் .... உழைக்கும் மக்களுக்கு .... ஒரு பொழுதுபோக்கு.
4. பத்து ரூபாய் போனால் .... என்று .... செலுத்தியிருக்கிறீர்கள்.
5. கலையின் மேல் உங்களுக்கு உள்ள .... இது காட்டுகிறது.

VI ஒரே சமயத்தில் ஒரு சொல்லை மட்டும் பயன்படுத்தி வாக்கியங்களை மாற்றி எழுதுக.

1. கேட்டு மகிழும்படியான பல பாடல்கள் உள்ளன. (சில கதைகள், ஏராளமான, தமிழ்)
2. இது கலையின் மேல் உங்களுக்கு உள்ள ஆர்வத்தைக் காட்டுகிறது. (தமிழ்மொழி, நமக்கு, எங்களுக்கு)
3. நல்ல கருத்துக்களைத் தரவேண்டியது கலைஞர்களின் பொறுப்பு. (எழுத்தாளர், அரசியல்வாதி, ஆசிரியர்)
4. எனது உரையை ஆரம்பிக்கிறேன். (படிப்பு, பேச்சு, பிரசங்கம்)

VII தமிழில் மொழிபெயர்த்து எழுதுக.

मेरे मित्र शाश्वत ने एक दुकान खोली है। उस का नाम रखा 'शाश्वती'। इस दुकान में सभी प्रकार की चीज़ें मिलती हैं। खाने पीने की चीज़ें, सजावट की चीज़ें, घर गृहस्थी के लिए कोई भी चीज़ आप चाहें सब यहाँ मौजूद है। कोई भी सामान ले लो, उस पर कोई चीज़ मुफ्त भी मिलती है। और सब चीज़ें ताज़ा बेचता है। दुकान 'शाश्वती' है और दुकानदार की मुस्कुराहट भी शाश्वत है। हँसते-हँसते बोलनेवाले हैं शाश्वत। कितने भी लोग सामान खरीदने आयें, सभी पर शश्वत की निगाह पड़ती है। एक बार उनकी दुकान में गए तो फिर हमेशा वहीं जाने का मन करता है।

VIII ஏதாவது ஒரு *கிராமத்துச் சந்தையைப்* பற்றிச் சிறு கட்டுரை எழுதுக.

20. பத்திரிகைச் செய்திகள்

(1)வாழ்த்து அட்டை தயாரிப்பிலும் அஞ்சல் துறை இறங்கியது.

புதுடில்லி, செப்.7.

பண்டிகை மற்றும் விழாக்காலங்களில் உறவினர்கள், நண்பர்களுக்கு அனுப்ப வசதியாக அஞ்சல் துறை தயாரித்துள்ள `வாழ்த்து அஞ்சல்' உறையைத் தகவல் தொடர்புத் துறை அமைச்சர் ராம் விலாஸ் பாஸ்வான் டில்லியில் நேற்று அறிமுகப்படுத்தினார். இனி வரும் பண்டிகைக் காலத்தைக் கருத்தில் கொண்டு மக்கள் தங்களுக்குள் வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொள்ள வசதியாக இந்திய அஞ்சல் துறை ஒரு புதிய அஞ்சல் உறையை அறிமுகம் செய்துள்ளது. பலவிதங்களில், பல வண்ணங்களில், இரண்டு வடிவங்களில் இந்த வாழ்த்து அஞ்சல் உறைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

ஸ்டாம்ப் ஒட்டப்பட்டு போஸ்ட் செய்வதற்குத் தயாராகவுள்ள இந்த உறைகளின் விலையாக ரூ.12, ரூ. 15 என்று அஞ்சல் துறை நிர்ணயித்துள்ளது.இந்திய அஞ்சல் துறையின் வர்த்தக வளர்ச்சி இயக்குநரகம் வடிமைத்துள்ள இந்த வாழ்த்து அஞ்சல் உறையை மத்திய தகவல் தொடர்புத்துறை அமைச்சர் ராம் விலாஸ் பாஸ்வான் டில்லியில் நேற்று அறிமுகப்படுத்தினார். பல டிசைன்களில் அச்சடிக்கப்பட்ட அட்டைகளை வைத்து அனுப்ப வசதியாக, அதற்கு இணையான அஞ்சல் உறையுடன் பெறலாம். 32 டிசைன்களில் உள்ள வாழ்த்து அஞ்சல்கள், வருகிற தீபாவளிப் பண்டிகைக்காக அதிகளவில் அச்சடிக்கப்பட்டு வருகின்றன. அதன் பிறகு மற்ற பண்டிகைகள், விழாக்கள் ஆகியவற்றுக்கும் வாழ்த்து அஞ்சல்களைத் தயாரிக்க அஞ்சல் துறை முடிவு செய்துள்ளது. இந்த வாழ்த்து அஞ்சல்கள் தனியார் கடைகள் மூலமும், நேரடியாக நிறுவனங்களில் வழங்குவது மூலமாகவும் விற்கப்படும்.

அஞ்சல் துறையின் இந்த வசதி குறித்து மக்களிடம் விளம்பரம் செய்யப்படும். இதன் மூலம் வாழ்த்து அட்டைகளை அதிகளவு தயாரித்து, மற்ற தனியார் வாழ்த்து அட்டைகளுடன் போட்டி ஏற்படுத்தப்படும் என்று அஞ்சல் துறை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

(தினமணி: செப் 8)

(2) 22 மொழிகளின் தமிழ்ச் சிறுகதைத் தொகுப்பு வெளியீடு

தஞ்சாவூர், செப். 7-15 தமிழ்ச் சிறுகதைகள் கொண்ட தொகுப்பு நாட்டின் 22 மொழிகளில் வெளியிடப்பட உள்ளது. மு. வரதராசனாரின் 'கரித்துண்டு', கருணாநிதியின் 'தென்பாண்டிச் சிங்கம்' ஆகிய புதினங்கள் 5 மொழிகளில் வெளியிடப்பட உள்ளன. இத் தகவலைத் தமிழ்ப் பண்பாடு மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் மு.தமிழ்க்குடிமகன் தெரிவித்தார். இவ்விரு புதினங்களும் தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி, ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும். சிறுகதைத் தொகுப்பு மற்றும் புதினங்களை 'குறள்பீடம்' அமைப்பு வரும் ஜன. 1-ம் தேதி வெளியிடுகிறது.
(தினமணி செப். 7)

(3) தமிழகத்தைச் சேர்ந்த 21 ஆசிரியர்களுக்கு தேசிய விருது

புது டில்லி, செப். 3 தமிழ்நாட்டைச் சேர்ந்த 21 ஆசிரியர்கள் 99ம் ஆண்டுக்கான தேசிய விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். கற்பிக்கும் திறமை, மாணவ மாணவிகளிடம் அன்பு காட்டுதல், சமூகசேவையில் ஆர்வம், கல்வித்துறையில் ஆர்வம் போன்றவற்றில் சிறந்து விளங்கும் ஆசிரியர்களுக்குத் தேசிய விருது வழங்கப்படுகிறது. 10.ஆயிரம் ரூபாய் ரொக்கமும், வெள்ளிப் பதக்கமும் விருதாக வழங்கப்படுகிறது. ஒவ்வொரு

ஆண்டும் ஆசிரியர் தினத்தன்று இந்த விருதை ஜனாதிபதி வழங்குகிறார்.
இந்த வகையில் 99-ம் ஆண்டு தேசிய விருது பெற நாடு முழுவதும் 284 ஆசிரிய ஆசிரியைகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதில் தமிழகத்தைச் சேர்ந்த 21 பேர், உ.பி.யைச் சேர்ந்த 32 பேர், மகாராஷ்டிராவைச் சேர்ந்த 26 பேர், மேற்கு வங்கத்தைச் சேர்ந்த 21 பேர், ஆந்திராவைச் சேர்ந்த 16 பேர், மத்திய பிரதேசம், கர்நாடகாவில் தலா 16 பேர், பீகார், ராஜஸ்தானில் தலா 12 பேர் ஆகியோர் விருதுக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இந்த விருதுகளை 5ம் தேதி ஆசிரியர் தினத்தன்று டில்லியில் ஜனாதிபதி நாராயணன் வழங்குகிறார். (தினமணி செப். 4)

சொற்பொருள்

அஞ்சல் துறை	डाक विभाग	தகவல்	सूचना
தொடர்பு	संचार	அமைச்சர்	मंत्री
அறிமுகப்படுத்து	पेश करना	பத்திரிகை	समाचार-पत्र
உறை	लिफ़ाफ़ा	பலவிதம்	कई नमूने
வண்ணம்	रंग	வடிவம்	आकार, रूप
தயாரி	बनाना	வர்த்தகம்	व्यापार
வளர்ச்சி	विकास	இயக்குநரகம்	निदेशालय
இணையான	समान	அச்சடி	छापना
முடிவு செய்	निश्चय करना	தனியார்	व्यक्तिगत
விளம்பரம்	विख्यात करना	போட்டி	प्रतियोगिता
சிறுகதை	लघु कहानी	தொகுப்பு	संग्रहण
வெளியீடு	प्रकाशित करना	புதினம்	उपन्यास
தெரிவி	घोषणा करना	விருது	पुरस्कार
தேர்ந்தெடு	चुनना	கற்பித்தல்	पढ़ाना

அன்பு காட்டு	प्रेम करना	சமூக சேவை	समूह सेवा
ஆர்வம்	दिलचस्पी, रुचि	கல்வித்துறை	शिक्षा विभाग
ரொக்கம்	रोकड़, नक़द	பதக்கம்	पदक
ஜனாதிபதி	राष्ट्रपति	வழங்கு	प्रदान करना
கருத்தில் கொள்	ध्यान में रखना	வாழ்த்து	अभिवादन
		அட்டை	पत्र

பயிற்சி

I வினாக்களுக்கு விடை எழுதுக.

1. தகவல் தொடர்புத்துறை அமைச்சர் யார் ? அவர் எதை அறிமுகப்படுத்தினார் ?
2. தபால் உறைகளின் விலை எவ்வளவு ?
3. தமிழ்ச் சிறுகதைகள் எத்தனை மொழிகளில் வெளிவரும் ?
4. எந்தெந்த மொழிகளில் புதினங்கள் வெளியிடப்படவுள்ளன ?
5. ஆசிரியர் தினம் எப்போது, எதற்காகக் கொண்டாடப்படுகிறது ?
6. தேசிய விருதுபெறும் ஆசிரியர்கள் குணநலன்கள் எவை ?
7. தமிழகத்திலிருந்து எத்தனை ஆசிரியர்கள் தேசிய விருதுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் ? விருதாக அவர்கள் பெறுவது என்ன ?

II தரப்பட்டுள்ள தமிழ்ச் சொற்களுக்குச் சமமான ஹிந்திச் சொற்களை எழுதுக.

அஞ்சல் துறை	அஞ்சல் உறை	விளம்பரம்
ஜனாதிபதி	தேசிய விருது	கல்வித்துறை
பதக்கம்	புதினம்	கற்பித்தல்
சிறுகதை	போட்டி	இயக்குநரகம்

III தரப்பட்டுள்ள ஹிந்திச் சொற்களுக்குச் சமமான தமிழ்ச் சொற்களை எழுதுக.

घोषणा करना	पेश करना	प्रकाशित करना
अभिवादन पत्र	निश्चय करना	ध्यान में रखना
दिलचस्पी	छापना	नकद
आकार	पुरस्कार	सूचना
समूह सेवा	मंत्रि	बनाना

IV மாதிரியில் உள்ளதுபோல் வாக்கியங்களைப் பிரித்து எழுதுக.

மாதிரி: அமைச்சர் டில்லியில் அறிமுகப்படுத்தினார்.
அமைச்சர் அறிமுகப்படுத்தினார்.
டில்லியில் அறிமுகப்படுத்தினார்.

1. அஞ்சல் உறைகள் பல விதங்களில், பல வண்ணங்களில் தயாரிக்கப்பட்டுள்ளன.
2. தனியார் கடைகள் மூலமும் நிறுவனங்கள் மூலமும் உறைகள் விற்கப்படும்.

3. பத்தாயிரம் ரூபாய் ரொக்கமும் வெள்ளிப் பதக்கமும் விருதாக வழங்கப்படும்.
4. சிறுகதைத் தொகுப்பு மற்றும் புதினங்களை குறள்பீடம் வெளியிடுகிறது.

V மாதிரியில் உள்ளதுபோல் வாக்கியங்களை மாற்றி எழுதுக.

மாதிரி: அமைச்சர் டில்லியில் அறிமுகப்படுத்தினார்.
அமைச்சர் டில்லியில் அறிமுகப்படுத்துகிறார்.
அமைச்சர் டில்லியில் அறிமுகப்படுத்துவார்.

1. பல வண்ணங்களில் அஞ்சல் உறைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.
2. வாழ்த்து அஞ்சல்களைத் தயாரிக்க அஞ்சல்துறை முடிவுசெய்துள்ளது.
3. அஞ்சல்துறை அதிகாரிகள் கூறியுள்ளனர்.
4. 21 ஆசிரியர்கள் தேசிய விருதுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
5. இந்தத் தகவலை அமைச்சர் தெரிவித்தார்.

VI மாதிரியில் உள்ளதுபோல் சொற்களை மாற்றி எழுதுக.

மாதிரி: விழாக்காலங்களில் = விழாக்காலத்தில்

1. நிறுவனங்களில் = ...
2. பலவிதங்களில் = ...
3. வண்ணங்களில் = ...
4. மொழிகளில் = ...

5. வடிவங்களில் = ...

6. அஞ்சலகங்களில் = ...

7. டிசைன்களில் = ...

VII சொற்களை வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

பரிமாறிக்கொள்	நிர்ணயம் செய்
விளம்பரம் செய்	முடிவு செய்
அறிமுகம் செய்	அதிக அளவில்
தேர்ந்தெடு	சமூக சேவை
அச்சடி	தெரிவி
ஆர்வம்	கருத்தில் கொள்

VIII தமிழில் மொழிபெயர்த்து எழுதுக.

क्या तुमने आजका समाचार-पत्र देखा? कहते हैं कि नौकरी के लिए आदमी चाहिए। तमिल पढ़ने और लिखने की जानकारी आवश्यक है। चेन्नै में काम करने को तैयार रहना चाहिए। चेन्नै में नौकरी करना कोई मुश्किल नहीं है। शुरू शुरू में नई जगह में रहना थोड़ा मुश्किल मालुम पड़ेगा। धीरे धीरे सब ठीक हो जाएगा। एक या दो महीने में कोई भी आदमी तमिल समझ लेने में समर्थ हो सकता है। बाद में बातचीत करने का आभ्यास हो जाएगा। नई भाषा पढ़ने में दिलचस्पी लेनी चाहिए। दिलचस्पी हो तो सब काम आसान हो जाएगा।

IX தங்கள் மாநிலத்தில் உள்ள ஒரு முக்கிய *சுற்றுலா மையத்தைப்* பற்றி ஒரு சிறு கட்டுரை எழுதுக.

21. திருமணம்

திரு.கந்தசாமியின் மகள் செல்வி. லட்சுமிக்கும் செல்வன். செந்தில்நாதன் பி.காம்.,சிஏ.க்கும் ஆவணி மாதம் 30-ம் நாள் வெள்ளிக்கிழமை (15.9.2000) திருமணம் செய்துவைக்கப் பெரியோர்களால் நிச்சயம் செய்யப்பட்டது. கந்தசாமி வரதட்சிணை, சீர் வரிசை முதலிய விஷயங்களில் மிகவும் கண்டிப்பானவர். இருந்தாலும், தன் மகள் கலியாணத்தில் அவர் ஒரு குறையும் வைக்கவில்லை.

பெண் வீட்டில் தான் திருமணம். சில வகுப்பினரிடையே திருமணம் மணமகன் வீட்டில் நடைபெறுவதாக திரு.மிஸ்ரா கேள்விப்பட்டிருந்தார். ஆனால் தங்கள் வகுப்பில் திருமணம் பெண் வீட்டில் நடப்பதுதான் வழக்கம் என்று கந்தசாமி சொன்னார். திருமணத்திற்கு இரண்டு நாட்கள் முன்னதாகவே மிஸ்ரா தம்பதியினர் கந்தசாமியின் ஊருக்குப் போய்ச்சேர்ந்தனர். கந்தசாமியின் வீட்டுக்கு வெள்ளை அடிக்கப்பட்டு, கதவு ஜன்னல்களுக்கு எல்லாம் புது பெயிண்ட் அடிக்கப்பட்டது. தெருவை அடைத்துப் பந்தல் போட்டு, வாழை மரங்கள் கட்டினார்கள். வீடு எங்கும் மாக்கோலம் இட்டு அழகுபடுத்தினார்கள். திருமணத்தின் முதல் நாள் இரவு மாப்பிள்ளை அழைப்பு. முக்கியமான உறவினர்களும், நண்பர்களும் அலங்கரிக்கப்பட்ட காரில்

மாப்பிள்ளையைப் பெண்வீட்டுக்கு அழைத்து வந்தனர். பரிசம் போட்டு முகூர்த்தஓலையும் அன்றே எழுதினார்கள்.

மறுநாள் காலை 9 மணி முதல் 10.30 க்குள் முகூர்த்தம். நான்கு மணிக்கே வீடு களைகட்டிவிட்டது. சமையல் அறையில் அண்டா குண்டாக்களின் சப்தம் கிளம்ப ஆரம்பித்துவிட்டது. பெரிய பெரிய இட்லிப்பானைகள், சட்டிகள் அடுப்பில் ஏற்றப்பட்டன. பெரிய கரண்டிகள், அகப்பைகள், பானைகள், சட்டிகள், வாணலிகள், சல்லடைகள் எல்லாம் `டண டண' என்ற ஒலியெழும்ப கழுவப்பட்டன. பெரிய அரிவாள்மணைகளில் காய்கறிகளை ஒரு பக்கம் அரிய ஆரம்பித்தார்கள். மறுபக்கம், தேங்காய்த் துருவிகள் `பரட் பரட்' என்று தேங்காய்களைத் துருவ அரம்பித்தன. இன்னொரு பக்கத்தில் சில பெண்கள் முறத்தில் அரிசியைப் புடைத்துக் கொண்டிருந்தனர்.

இரு ஒரு புறம் நடக்க, மணவறையில் கலியாண ஏற்பாடுகள் மும்முரமாக நடந்துகொண்டிருந்தன. மணப்பெண், தாத்தாப் பாட்டிக்குப் பாதபூஜை செய்தாள். பெண்ணின் தாய்மாமன் பெண்ணுக்கு நெற்றிப் பட்டம் கட்டினார். பெண்ணின் தோழிகளில் சிலர் சிறப்பாக மணப்பெண் லட்சுமியை அலங்காரம் செய்வதில் ஈடுபட்டிருந்தனர்.

மணவறையின் ஒருபக்கத்தில் பெண்ணின் சீர்கள் வைக்கப்பட்டிருந்தன. இரும்பு அலமாரி, சோபா, நாற்காலி, மெத்தைகள், வேலைப்பாடு மிகுந்த மேஜை என்று என்னென்னவோ வாங்கி வைத்திருந்தார் கந்தசாமி.

மாப்பிள்ளை செய்யவேண்டிய சடங்குகளும் பல இருந்தன. மாப்பிள்ளைக்குக் கூடப்பிறந்தவர்கள் என்று யாரும் இல்லாவிட்டாலும், மாப்பிள்ளையின் அப்பாவுக்கு உடன்பிறந்தோர் பலர் இருந்தனர். பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, சின்னம்மா, அத்தை, மாமா மயமாக இருந்தனர். இத்தனைபேர் காலிலும் பெண்-மாப்பிள்ளை விழவேண்டுமே என்று கந்தசாமி போலியாகக் கவலைப்பட்டார்.

திருமாங்கலியத் தட்டு எல்லோருடைய ஆசீர்வாதத்திற்காகவும் சுற்றி வந்தது. எல்லாச் சடங்குகளும் முடிந்தபின் முக்கியமான கட்டம் வந்தது. மந்திர கோஷம் முழங்க, அக்கினியை வலம் வந்து, நாத்தனார் விளக்குப் பிடிக்க சிரஞ்சீவி செந்தில்நாதன் கந்தசாமியின் மகள் சௌபாக்கியவதி லட்சுமியின் கழுத்தில் மூன்று முடிச்சுப் போட்டான். கெட்டிமேளம் முழங்கியது. பெரியோர்கள் தங்கள் ஆசீர்வாதத்தின் அடையாளமாக அட்சதையை மணமக்கள் மீது தூவினர். அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து செல்வி லட்சுமி, திருமதி லட்சுமி செந்தில்நாதனாக மாறினாள்.

சொற்பொருள்

நிச்சயம்	निश्चय
கண்டிப்பு	इरादे का पक्का
வகுப்பு	जाति
கேள்விப்படு	सुना हुआ
வெள்ளையடி	सफ़ेदी करना
பந்தல்	नारियल के पत्ते का पंडाल
களைகட்டு	शोभायमान होना
மாக்கோலம்	आटे से जमीन पर बनाई जानेवाली रंगोली चित्रकारी
அழகுபடுத்து	अलंकृत करना
முகூர்த்தஓலை	विवाह का औपचारिक घोषणा पत्र
குறை	कमी
மாப்பிள்ளை	दूल्हे का दुलहन के घर पर आना
இரவு	रात
அழைப்பு	बरात जैसी एक रस्म
உறவினர்	रिश्तेदार
பரிசம்	दूल्हे की तरफ से दुल्हन को दी जानेवाली वस्तुएँ
அடுப்பு	चूल्हा
அண்டா	बड़े-बड़े बरतन
ஏற்று	चढ़ाना
கரண்டி	चमचा
வாணலி	कड़ाहा
சல்லடை	छलनी
முறம்	सूप
புடை	सूप से चावल आदि साफ करना

பாத பூஜை	पाद पूजा
பட்டம்	दुलहन के सिरपर बाँधा जानेवाला एक आभूषण
அண்ணி	भाभी
சீர்	दुलहन को मायके से दी जानेवाली वस्तुएँ
வேலைப்பாடு	चित्रकारी नक्काशी
பெரியப்பா	ताऊ
பெரியம்மா	ताई
சித்தப்பா	चाचा
சின்னம்மா	चाची
அத்தை	बुआ / मामी
போலியாக	मज़ाक में, झूठमूठ
வலம் வா	फेरे लगाना
நாத்தனார்	ननद
திருமாங்கலியம்	मंगल सूत्र
முழங்கு	आवाज़ उठना
கெட்டிமேளம்	बाजों का जोरदार धुन
தூவு	बिखरना
அட்சதை	हल्दी युक्त चावल
அம்மி	सिल
மிதி	पैर रखना या रौंदना

பயிற்சி

I வினாக்களுக்கு விடை எழுதுக.

1. கந்தசாமியின் மகள் பெயர் என்ன ?
2. லட்சுமிக்கு மாப்பிள்ளை யார் என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது ?

3. திருமணத்தை எப்போது நடத்தத் தீர்மானித்தார்கள் ?
4. மகளுக்குச் சீதனமாகக் கந்தசாமி என்னென்ன வாங்கியிருந்தார் ?

II தரப்பட்டுள்ள தமிழ்ச்சொற்களுக்குச் சமமான ஹிந்திச் சொற்களை எழுதுக.

நிச்சயித்தல்	கேள்விப்படு	அழகுபடுத்து
மாப்பிள்ளை	மணப்பெண்	வெள்ளையடி
அட்சதை தூவு	உடன் பிறந்தோர்	திருமாங்கலியம்
உறவினர்கள்	கண்டிப்பு	நாத்தனார்

III தரப்பட்டுள்ள ஹிந்திச் சொற்களுக்குச் சமமான தமிழ்ச் சொற்களை எழுதுக.

ताऊ	चाचा	ताइ	चाची	ननद
भाभी	फूफा	बुआ	नाना	नानी
दूलहा	दुलहन	मंगलसूत्र	सिल	शादी

IV இனத்தில் சேராத சொற்களைப் பொறுக்கி எழுதுக.

மதிரி: இட்லி, சட்னி, சாம்பார், தோசை, நாற்காலி, வடை
= <u>நாற்காலி</u>

1. அண்ணன் அண்ணி சின்னம்மா பெரியம்மா வக்கீல் மாமா அத்தை
2. சந்தனம் குங்குமம் பன்னீர் வேப்பமரம் திருநீர் மஞ்சள் மாடு
3. சேலை ரவிக்கை பாவாடை வேட்டி தண்ணீர் சட்டை அப்பா

V அடைப்புக் குறிக்குள் உள்ள சொற்களைக் கோடிட்ட இடங்களில் பொருத்தமான முறையில் அமைத்து வாக்கியங்ளை எழுதுக.

மாதிரி: தேங்காயைத் .... (திருகு) ஆரம்பித்தனர்.
முறத்தில் அரிசியைப் .... (புடை) ஆரம்பித்தனர்.
தேங்காயைத் திருக ஆரம்பித்தனர். முறத்தில் அரிசியைப் புடைக்க ஆரம்பித்தனர்.

1. மந்திரம் .... (சொல்), அக்கினியை .... (வலம் வா), நாத்தனார் விளக்கு .... (பிடி), செந்தில்நாதன் கந்தசாமியின் மகள் .... (கழுத்து) மூன்று முடிச்சுப் போட்டான்.
2. தெருவை .... (அடை) பந்தல் .... (போடு) வாழைமரங்கள் .... (கட்டு) வீட்டை .... (அழகுபடுத்து)க் கலியாணத்திற்கு ஏற்பாடு செய்தார்.
3. மாப்பிள்ளையை ஊர்வலமாக .... (அழைத்து வா), பரிசம் .... (போடு) முகூர்த்த ஓலையை எழுதினார்கள்.

VI சொற்களை மாதிரியில் உள்ளது போல் இணைத்து எழுதுக.

மாதிரி: தாலி கட்டு

தாலி	புடை
அரிசி	அழைப்பு
மலர்	போடு

மாக்கோலம்	முழங்கு
பரிசம்	இடு
முகூர்த்த ஓலை	கட்டு
மந்திரம்	தூவு
மாப்பிள்ளை	எழுது

VII கீழே கொடுக்கப்பட்டுள்ளவாக்கியங்களை மாதிரியில் உள்ளவாறு மாற்றி எழுதுக.

மாதிரி: 1. வீட்டுக்கு வெள்ளை அடிக்கப்பட்டு கதவு ஜன்னல்களுக்குப் புது பெயிண்ட் அடிக்கப்பட்டது =
வீட்டுக்கு வெள்ளை அடிக்கப்பட்டது.
கதவு ஜன்னல்களுக்குப் புது பெயிண்ட் அடிக்கப்பட்டது.

1. பந்தல் போட்டு வாழைமரங்கள் கட்டினார்கள்.
2. வீட்டைச் சுத்தம் செய்து மாக்கோலம் இட்டு அழகுபடுத்தினார்கள்.
3. பரிசம் போட்டு முகூர்த்த ஓலை எழுதினார்கள்.
4. மந்திரம் சொல்ல அக்கினியை வலம் வந்தனர்.
5. நாத்தனார் விளக்குப் பிடிக்க மணமகன் மணமகள் கழுத்தில் மூன்று முடிச்சுப் போட்டான்.

மாதிரி: 2. இட்டிலிப் பானைகள், சட்டிகள் அடுப்பில் ஏற்றினார்கள். =
இட்டிலிப்பானைகளையும் சட்டிகளையும் அடுப்பில் ஏற்றினார்கள்.

1. கரண்டிகள், சட்டிகள், பானைகள் கழுவப்பட்டன.

2. இட்லி, தோசை, பொங்கல் பரிமாறப்பட்டன.
3. சட்டைகள், வேட்டிகள் தரப்பட்டன.
4. சந்தனம், மஞ்சள் பூசப்பட்டன.
5. தென்னை, வாழை நடப்பட்டன.

மாதிரி: 3. வெங்காயம் அரிய ஆரம்பித்தார்கள். :
வெங்காயத்தையும் அரிந்தார்கள்.

1. தேங்காய் திருவ ஆரம்பித்தார்கள்.
2. அரிசி புடைக்க ஆரம்பித்தனர்.
3. அடுப்பு எரிக்க ஆரம்பித்தனர்.
4. உணவு பரிமாற ஆரம்பித்தனர்.

VIII तमिल में अनुवाद कीजिए।

मेरी छोटी बहन की शादी है। परिवार में सब की लाड़ली है वह। माता पिता की इकलौती बेटी है। इसलिए धूम-धाम से शादी कर रहे हैं। मेरी बहन अपूर्व सुन्दर और सरल लड़की है। उस का दूल्हा भी होशियार और नेक आदमी हैं। वे दहेज लेनेवालों में से नहीं हैं। वे एक आदर्शवादी युवक हैं। वे एक कालेज में साहीत्य पढ़ाते हैं।

IX உங்கள் குடும்பத்தில் நடந்த ஒரு *திருமணத்தைப் பற்றிப்* பத்து வரிகள் தமிழில் எழுதுக.

22. வீரமாமுனிவர்

வீரமாமுனிவர் இத்தாலிய நாட்டில் காஸ்திரியோனே என்னும் ஊரில் 1680-ல் பிறந்தார். இவரது இயற்பெயர் கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி என்பது. கான்ஸ்டன்டைன் என்றால் இத்தாலிய மொழியில் 'தைரியம்' என்று பொருள்படுமாதலின் இவர் தம் பெயரைத் `தைரியநாதர்' என்று வைத்துக்கொண்டார். இவருடைய தமிழ்ப் புலமையைக் கண்ட தமிழ் மக்கள் இவரை `வீரமாமுனிவர்' என்று அழைத்தனர். 1710-ல் இந்தியாவுக்கு வந்து கத்தோலிக்க சமயத் தொண்டாற்றத் தொடங்கினார். தமிழ் மக்களுக்குச் சமயக் கருத்துக்களைத் தமிழ் மூலமாகவே கூற வேண்டும் என்று விரும்பித் தமிழைக் கற்றார். இவருடைய ஆசிரியர் சுப்ரதீபக் கவிராயர். அவரிடம் இலக்கண இலக்கியங்களை இவர் நன்றாகக் கற்றார்.

1767-இல் சேரநாட்டில் அம்பலக்காட்டில் ஒரு மடத்தில் தங்கியிருந்தபோது பிப்ரவரி மாதம் 4-ஆம் நாள் இவர் உயிர்நீத்தார். இவர் இலத்தீன், பிரெஞ்சு, கிரேக்கம், இத்தாலி, ஆங்கிலம் முதலிய மொழிகளை முறையாகப் பயின்றிருந்தார். இவர் எந்த அளவுக்குத் தமிழில் புலமை பெற்றிருந்தாரோ அந்த அளவுக்குத் தெலுங்கு, சமஸ்கிருதம் ஆகியவற்றிலும் புலமை பெற்றிருந்தார். தாம் பெற்ற பன்மொழிப் புலமையைத் தமிழ் மொழியின் வளத்திற்கே பயன்படுத்தினார்.

திருக்குறள், கம்பராமாயணம், சீவகசிந்தாமணி ஆகியவற்றின் காவிய நயத்தில் மூழ்கிய இவர் செந்தமிழ்க் காப்பியம் ஒன்றையும் படைத்தார். சூசையப்பரின் வரலாற்றைத் `தேம்பாவணி' என்றும் நூல் வடிவத்தில் 3615 விருத்தப்பாக்களில் வடிவமைத்தார். இன்னும் திருக்காவலூர்க் கலம்பகம், அடைக்கல நாயகி வெண்கலிப்பா, கித்தேரி அம்மானை முதலிய பிரபந்தங்களையும் படைத்துள்ளார்.

'பரமாத்தன் என்னும் அவிவேக பூரண குரு கதை' என்ற நகைச்சுவை நிறைந்த கதையினையும் எழுதியுள்ளார். அது மிகச் சிறிய நூல்தான் என்றாலும் அக்காலத்தில் நகைச்சுவை ததும்ப எழுதப்பட்ட உரை நடை நூல் இது. பஞ்ச தந்திரம் போன்று பல நீதிகளைக் கூறுவது.

தமிழில் உள்ள ஐந்திலக்கணங்களையும் விளக்கும் 'தொன்னூல் விளக்கம்' என்ற ஓர் இலக்கண நூலையும் இவர் இயற்றினார். உலக வழக்கில் காணப்படும் தமிழ் இலக்கணத்தைக் `கொடுந்தமிழ் இலக்கணம்' என இலத்தின் மொழியில் எழுதியுள்ளார். இதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

அக்காலத்தில் எகரமும், ஒகரமும் குறிலாக எழுதப்படும்போது மேற்புள்ளியோடும், நெடிலாக எழுதப்படும் போது புள்ளி இல்லாமலும் எழுதப்பட்டன. இதனால் ஏற்படும் இடர்ப்பாடுகளைப் போக்க

விரும்பினார். எகரத்தின் கீழ் சிறு சாய்வுக் கோடு சேர்த்து ஏகாரமாக்கினார். ஒகாரத்தைச் சுழித்து ஓகாரமாக்கினார். உயிர் மெய்யெழுத்துகளில் நெடிலுக்கு இரட்டைக் கொம்பு அமைத்து (கே,கோ என்று) எழுதும் பழக்கத்தை ஏற்படுத்தினார்.

அகராதி முறையினைத் தமிழுக்குத் தந்தவர் வீரமா முனிவரே. இவர் பகுத்துத் தந்த `சதுர் அகராதி' பெயர், பொருள், தொகை, தொடை என நான்கு பிரிவுகளைக் கொண்டது. பிற்காலத்தில் எழுதப்பட்டத் தமிழ் அகராதிகளுக்கு எல்லாம் இதுவே முன்னோடியாக அமைந்தது. மேலை நாட்டவர்க்குப் பயன்படும்படி தமிழ்-இலத்தின் அகராதியும் இவர் எழுதியுள்ளார்.

திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால் இரண்டையும் இலத்தீனில் மொழி பெயர்த்துள்ளார். பிற நாட்டார் திருக்குறளின் சிறப்பை அறிந்துகொள்ள இதுவே முதன் முதலில் உதவியது. இவர் எவ்வளவுக்கு எவ்வளவு சமயத்தொண்டு ஆற்றினாரோ, அவ்வளவுக்கு அவ்வளவு சிறப்பான தமிழ்த் தொண்டும் ஆற்றினார். கிறிஸ்துவ சமயத்தினருக்கு நல்லதொரு காப்பியமும், தலைவர்கள் பின்பற்றி ஒழுக வேண்டிய ஒழுக்க முறைகளையும், கடமைகளையும் விளக்கி உரைக்கும் பெருநூலும் தந்தார். உரைநடை எழுதுவதில் முன்னோடியாகத் திகழ்ந்தார். அகராதி நூல்களின் தலைவரானார். மொழி ஆராய்ச்சிக்கு வித்திட்டார்.

அவிவேக பூரணகுரு கதையிலிருந்து ஒரு பகுதி. "குரு நதியைப் பார்த்து அதில் இறங்கப் பயந்து, இது மிகவும் பொல்லாதது. மோசமுடையது. ஆகையால் இது விழித்திருக்கும் வேளையில் இதைக் கடந்து போகக்கூடாது என்று குருவானவர், "ஆறு நித்திரை செய்கிறதோ, விழித்திருக்கிறதோ? சோதித்துப்பார்", என்று சொல்லி மிலேச்சன் என்ற சீடனை ஏவினார். அவன் குருவின் வார்த்தையைச் சிரசின் மேல் கொண்டு, அப்போது புகைச் சுருட்டுப் பற்ற வைக்கும்படி தன் கையில் எடுத்த கொள்ளிக்கட்டையைக் கொண்டு போய், தான் ஆற்றில் இறங்காமல், தூர நின்று எட்டித் தண்ணீரிலே தோய்த்தவுடனே தண்ணீர் சுறீரென்று புகைந்தது கண்டு, மிலேச்சன் பதறித் தவறிக் கீழே விழுந்து, பதைத்து, உதைத்துக்கொண்டு மெல்லென எழுந்து நடுங்கிப்பயந்து, அலறிக்குளறி அழுதுகொண்டு ஓடிவந்து, "ஐயா, ஐயா. நதியைக் கடக்கிறதற்கு இது தருணமன்று. அது விழித்திருக்கிறது. நான் தொட்டவுடனே நஞ்சுள்ள நாகம் போலச் சீறிக் கொதித்துக் கோபித்து இரைந்து புகைந்து எழுந்து பாய்ந்து என்னைக் கொல்ல வந்தது. அதன் உக்கிரத்துக்கு இலக்காகாமல் தங்கள் பரம கிருபையினாலும் என்னைப் பெற்றவள் செய்த தவத்தினாலும் தப்பி நான் உயிர் பிழைத்து மீண்டு வந்தது மிகவும் அதிசயம் என்றான்."

சொற்பொருள்

இயற்பெயர்	वास्तविक नाम	அழை	पुकारना, बुलाना

சோதித்துப்பார்	जाँच करना	தொடங்கு	शुरु करना
கல்	सीखना	இலக்கணம்	व्याकरण
நன்றாக	अच्छी तरह	மடம்	मठ
உயிர் நீக்கு	प्राण त्यागना	முறையாக	विधिवत
பயில்	सीखना	புலமை	पांडित्य
காவியநயம்	काव्य सौंदर्य	வரலாறு	इतिहास
உரைநடை	गद्य	இடர்ப்பாடு	तकलीफ
போக்கு	प्रवुर्ति करना	விரும்பு	चाहना
குறில்	ह्रस्व	நெடில்	दीर्घ
உயிர்மெய்	व्यंजन और स्वर	அகராதி	शब्द कोश
முன்னோடி	अग्र दूत	விழித்திரு	जागना
கடந்து போ	पार करना	நித்திரை	नींद
புகை	धूआँ	தவறிவிழு	लुढ़कना
நஞ்சு	विष	நாகம்	साँप
தவம்	तपस्या	பெற்றவள்	माँ
கொல்	मार डालना, हत्या करना	உயிர் பிழை	जिन्दा निकलना, प्राण बचना
தொண்டு ஆற்று	सेवा करना	ஏவு	जाने केलिए कहना
மேலைநாட்டார்	विदेशी लोग		
கொள்ளிக்கட்டை	जलती लकड़ी		

பயிற்சி

I வினாக்களுக்கு விடை எழுதுக.

1. வீரமாமுனிவர் ஏன் தமிழ் கற்றார் ?

2. வீரமாமுனிவரின் ஆசிரியர் யார் ?
3. வீரமாமுனிவர் எழுதிய அகராதியின் பெயர் என்ன ? அது எத்தனைப் பிரிவுகளைக் கொண்டது ?
4. ஆறு நித்திரை செய்கிறதா என்பதை மிலேச்சன் எப்படிச் சோதித்தான் ?
5. வீரமாமுனிவரின் உரைநடை நூல் எது ? எப்படிப்பட்டது ?
6. வீரமாமுனிவரின் செந்தமிழ்க் காப்பியம் என்று சொல்லப்படுவது எது ?
7. வீரமாமுனிவர் எழுதிய இலக்கண நூல் எது ?

II பொருத்தமான வார்த்தையைப் பயன்படுத்தி மாதிரியில் உள்ளது போல் கோடிட்ட இடங்களை நிரப்புக.

மாதிரி: இவர் .... அளவுக்குத் தமிழில் புலமை பெற்றிருந்தாரோ .... அளவுக்குப் பிற மொழிகளிலும் புலமை பெற்றிருந்தார்.
(எந்த, இந்த, அந்த)
இவர் எந்த அளவுக்குத் தமிழில் புலமை பெற்றிருந்தாரோ அந்த அளவுக்குப் பிற மொழிகளிலும் புலமை பெற்றிருந்தார்.

1. கண்ணன் .... அளவுக்கு கார் ஓட்டுவானோ .... அளவுக்கு லாரியும் ஓட்டுவான்.
(இந்த, அந்த, எந்த)

2. அவன் .... அளவுக்கு எழுத்தாற்றல் உள்ளவனோ .... அளவுக்கு பேச்சாற்றல் உள்ளவன். (இந்த, அந்த, எந்த)
3. வீரமா முனிவர் எவ்வளவுக்கு .... சமயத் தொண்டு ஆற்றினாரோ .... அவ்வளவு சிறப்பான தமிழ்த் தொண்டும் ஆற்றினார். (எவ்வளவுக்கு, அவ்வளவுக்கு, எவ்வளவு, அவ்வளவு)
4. நீ எவ்வளவுக்கு .... படிக்கிறாயோ .... அவ்வளவு அறிவு பெறுவாய். (எவ்வளவுக்கு, அவ்வளவுக்கு, எவ்வளவு,அவ்வளவு)

III மாதிரியில் உள்ளவாறு பொருத்தி எழுதுக.

மாதிரி: பெஸ்கி .... தைரிய நாதர்

பெஸ்கி	தொன்னூல் விளக்கம்
ஆசிரியர்	சூசையப்பர் வரலாறு
அவிவேக பூரணகுரு	தைரிய நாதர்
தேம்பாவணி	நகைச் சுவைக் கதை
ஐந்திலக்கணம்	சுப்ரதீபக் கவிராயர்

IV மாதிரியில் உள்ளவாறு கீழ்கண்ட தொடர்களை மாற்றி எழுதுக.

மாதிரி 1: தமிழைக் கற்றார். --> தமிழைக் கற்கிறார்.

1. தமிழ் மொழியின் வளத்திற்கே பயன்படுத்தினார்.
2. செந்தமிழ்க் காப்பியம் படைத்தார்.

3. ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.
4. மிலேச்சனை ஏவினார்.
5. தமிழ் - இலத்தீன் அகராதியும் எழுதினார்.

மாதிரி 2: தமிழ்க் கற்றார். ---> தமிழ்க் கற்பார்.

1. சமயத் தொண்டாற்றத் தொடங்கினார்.
2. புலமை பெற்றிருந்தார்.
3. இடர்ப்பாடுகளை நீக்க விரும்பினார்.
4. இது முன்னோடியாக அமைந்தது.

மாதிரி 3: வீரமாமுனிவர் `பரமாத்த குரு' என்னும் கதையை எழுதினார்.
`பரமாத்த குரு' என்னும் கதை வீரமாமுனிவரால் எழுதப்பட்டது.

1. இவர் செந்தமிழ்க் காப்பியம் படைத்தார்.
2. இவர் மொழி ஆராய்ச்சிக்கு வித்திட்டார்.
3. இவர் இலக்கண நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

V தரப்பட்டுள்ள ஹிந்தி சொற்களுக்குச் சமமான தமிழ்ச் சொற்களை எழுதுக.

गद्य	शब्दकोश	व्याकरण	पांडित्य
चाचा	रात	इतिहास	तकलीफ
भूल	अच्छा	पुरस्कार	बदल

साडी	भाषण	शुल्क	योजना
समस्या	प्राण	जायदाद	परिचय

VI தமிழில் மொழிபெயர்த்து எழுதுக.

हम जितनी मेहनत करेंगे, उतनी उन्नति मिलेगी। जो काम आज करना है उसे कल के लिए टालना नहीं चाहिए। काम करना हमारे वश मे है। लेकिन फल का निश्चय भगवान पर निरभर है। यह सच है कि भगवान उस को सहायता करते हैं जो अपना काम अच्छी तरह करता है। जिस प्रकार हम काम करते हैं फसी प्रकार फल भी मिलता है। जहाँ सच्चाई है, जहाँ धर्म है, जहाँ अच्चाई है वहाँ भगवान भी हैं। जहाँ अधर्म होता है , जहाँ हत्याचार होता है वहाँ अच्छे लोगों की सहायता के लिए भगवान पहुँचते हैं। जो भगवान का पुकार सुनता है वह अच्छा काम करता है और वैसे लोगों की रक्षा के लिए भगवान आते हैं।

VII `*உழைப்பே உயர்வு*' என்னும் கருத்தை வலியுறுத்தும் விதத்தில் ஒரு சிறு கதையைத் தமிழில் எழுதுக.

23. பூனைப் பட்டாளம்

எனக்குப் பிராணிகள் என்றால் மிகவும் பிடிக்கும். என் மகனுக்கும். மனைவிக்குங் கூடத்தான். குறிப்பாகப் பூனை, நாய் என்றால் எங்களுக்கு உயிர். அணில், ஆடு, கோழி, மான், முயல், நாய், குரங்கு என்று நான் வளர்க்காத பிராணியே இல்லை என்று சொல்லலாம். அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் எங்கள் வீட்டை ஒரு `மினி' மிருக காட்சிச்சாலை என்று கூறுவார்கள். எங்கள் வீட்டில் ஒரு பூனைப்பட்டாளமே உண்டு.

என் மகன் சிறுவனாக இருந்தபோது தனக்கு ஒரு பூனை வேண்டும் என்று அடம்பிடித்தான். அதுவும் வெள்ளைப் பூனைதான் வேண்டுமாம்! வெள்ளைப் பூனைக்காக நான் என்ன பாடுபட்டேன் தெரியுமா? எங்கள் குடியிருப்புப் பகுதியில் தினமும் காலையும் மாலையும் தெருத்தெருவாகச் சுற்றினேன். சந்துபொந்துகளில் எல்லாம் தேடித்தேடி அலைந்தேன். எல்லோரும் என்னைப் பைத்தியம் என்று கூடச் சொல்ல ஆரம்பித்தார்கள்! என் தேவையை நண்பர்கள் எல்லோரிடமுங்கூடச் சொல்லிவைத்திருந்தேன். ஆனால் பலன் எதுவும் இல்லை. பத்துப் பதினைந்து நாட்கள் ஆபீஸுக்கும் போகாமல் சுற்றியதுதான் மிச்சம். பல நாட்கள் நான் ஆபீஸ் பக்கம் எட்டிக்கூடப் பார்க்காததால் எனக்கு "மெமோ"வே வந்துவிட்டது. ஆனால் அதைப்பற்றி நான் கொஞ்சமும் கவலைப்படவேயில்லை. இப்போது என் லட்சியமெல்லாம் பூனைக்குட்டிதான்.

நான் பூனை கொண்டுவந்து தரவில்லையென்று என் செல்லப் பிள்ளை என்னுடன் பேசுவதையே விட்டுவிட்டான். என் மனைவி தவம் கிடந்து, பல விரதங்கள் இருந்து பெற்ற பிள்ளையாயிற்றே! அவனாக ஒன்று கேட்டு இதுவரை இல்லையென்று நான் சொன்னதேயில்லை.

ஒருநாள் பக்கத்து ஊரில் நெருங்கிய உறவினர் ஒருவரின் வீட்டுத் திருமணத்திற்கு நான் போகவேண்டியிருந்தது. பஸ் நிலையத்திற்கு வந்து பஸ் டிக்கட்டும் வாங்கிவிட்டேன். பஸ்ஸிற்காகக் காத்திருந்தேன். ஏதோ யோசித்துக்கொண்டிருந்தேன். வேறென்ன? எல்லாம் பூனையைப்பற்றித்தான்! தற்செயலாகத் தூரத்தில் இருந்த ஒரு மரத்தின்கீழ் என் பார்வை சென்றது. கிடைக்காத ஒரு புதையல் கிடைத்த மாதிரி என் உள்ளம் சந்தோஷத்தில் மிதந்தது. அதற்குள் நான் செல்ல வேண்டிய பஸ்ஸூம் வந்துவிட்டது. ஆனால் அந்த க்ஷணத்தில் நான் என் பஸ் பயணத்தையும் மறந்தேன்.

கண்ணை மூடிக்கொண்டு அந்த மரத்தை நோக்கி ஓடினேன். போகும் வேகத்தில் ஒரு பெண்ணை இடித்துவிட்டேன். கோபத்தில் அந்தப் பெண் என்னைத் திட்டினாள். அதையும் வாங்கிக்கொண்டேன். எதிரில் வந்துகொண்டிருந்த சைக்கிள்காரருடன் மோதிக்

கீழேவிழுந்தேன். எப்படியோ தட்டுத்தடுமாறி எழுந்தேன். எழுந்து மீண்டும் ஓடினேன். என் லட்சியம் எல்லாம் இப்போது அந்த மரந்தான்!

என்ன ஆச்சரியம்! நான் நினைத்ததுபோல் மரத்தின் கீழ் ஒரு பூனைக் குட்டி! அழகான பூனைக்குட்டி!! அதுவும் வெள்ளைப் பூனைக்குட்டி!!! என்னைப் பார்த்ததும் அது `மியாவ், மியாவ்' என்று தன் மென்மையான குரலில் என்னை வரவேற்று அழைத்தது. குனிந்து மெதுவாக `என்' பூனைக்குட்டியைத் தடவிக்கொடுத்தேன். எடுத்தேன். என் மேல் துண்டில் அதைச் சுற்றினேன். நெஞ்சோடு நெஞ்சாக அதை அணைத்துக்கொண்டு வீட்டிற்கு ஓடி வந்தேன். சட்டைப் பையில் இருந்த பஸ் டிக்கட்டு என்னைப் பார்த்துச் சிரிப்பதுபோல் இருந்தது.

இப்போது எங்கள் வீட்டில் அந்தப் பூனைக்குட்டி, தன் பேரன் பேத்திகளுடன் மகிழ்ச்சியாக ஒரு பெரிய `குடும்பி'யாக இருக்கிறது.

சொற்பொருள்

பிராணி	प्राणी, जानवर	அணில்	गिलहरी
ஆடு	बकरा-बकरी	கோழி	मुर्गा-मुर्गी
மான்	हिरण	முயல்	खरगोश

குரங்கு	बंदर	பூனை	बिल्ली
பட்டாளம்	दल, भीड़	அக்கம் பக்கம்	आसपास
சிறுவன்	लड़का	அடம்பிடி	कठोर रहना
பாடுபடு	परिश्रम करना	குடியிருப்பு	बस्ती
சுற்று	घूमना	சந்துபொந்து	गली
தேடு	खोजना	கவலைப்படு	चिंता करना
லட்சியம்	लक्ष्य	தவம்	तपस्या
காத்திரு	प्रतीक्षा करना	தற்செயலாக	संयोग
புதையல்	ख़ज़ाना	இடி	टकराना
திட்டு	गाली देना	மோது	टकराना
தடுமாறு	टटोलना	தடவிக்கொடு	सहलाना
சுற்று	लपेटना	சிரி	हँसना
பேரன் பேத்தி	पोता-पोती		

பயிற்சி

I வினாக்களுக்கு விடை எழுதுக.

1. `எங்கள் வீட்டை மிருககாட்சிச்சாலை என்பார்கள்'. ஏன் ?
2. வெள்ளைப் பூனைக்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் என்னென்ன ?
3. பஸ் டிக்கட்டு வாங்கியிருந்தும் ஊருக்குச் செல்லாதது ஏன் ?
4. `பஸ் டிக்கட்டு சிரிப்பதுபோல் இருந்தது'. இதன் பொருள் என்ன ?
5. பூனைக்குட்டி இப்போது வீட்டில் எப்படி இருக்கிறது?

II தரப்பட்டுள்ள தமிழ்ச் சொற்களுக்குச் சமமான ஹிந்திச் சொற்களை எழுதுக.

பாடுபடு	அக்கம்பக்கம்	பட்டாளம்
கவலைப்படு	தற்செயலாக	பேரன்பேத்தி
குடியிருப்பு	சந்துபொந்து	அடம்பிடி
தடுமாறு	காத்திரு	திட்டு

III பொருத்தமான சொற்களால் கோடிட்ட இடங்களை நிரப்பி எழுதுக.

(க்ஷணத்தில், பார்வை, வளர்க்காத, லட்சியம், பயணத்தை, வேகத்தில், சந்தோஷத்தில்)

1. நான் .... பிராணியே இல்லை.
2. இப்போது என் .... எல்லாம் பூனைக்குட்டிதான்.
3. அந்த .... என் பஸ் .... மறந்தேன்.
4. என் .... தூரத்திலிருந்த மரத்தின் கீழ் சென்றது.
5. ஓடும் .... பெண்ணை இடித்துவிட்டேன்.

IV மாதிரியில் உள்ளதுபோல் வாக்கியங்களை மாற்றி எழுதுக.

மாதிரி 1: வெள்ளைப் பூனை வேண்டும்.

---> வெள்ளைப் பூனைதான் வேண்டுமாம்.

1. ஆபீஸ் பக்கம் போகவில்லை.
2. அவன் செல்ல மகன்.
3. பஸ்ஸிற்கு டிக்கட்டு வாங்கினார்.
4. சைக்கிள்காரருடன் மோதினார்.
5. பூனைக்குட்டி அவர் லட்சியம்.

மாதிரி 2: வேகமாக ஓடி கீழே விழுந்தார்.

---> வேகமாக ஓடினார். கீழே விழுந்தார்.

1. டிக்கட்டு வாங்கி பஸ்ஸுக்காக் காத்திருந்தேன்.
2. மெதுவாக எழுந்து மீண்டும் ஓடினேன்.
3. பூனைக்குட்டி என்னைப் பார்த்து மியாவ் மியாவ் என்றது.
4. கீழே குனிந்து பூனையைத் தடவிக்கொடுத்தேன்.

மாதிரி 3: நான் படிக்காத புத்தகம் இல்லை.

---> நான் படிக்காத புத்தகமே இல்லை.

1. நாங்கள் வளர்க்காத பிராணி இல்லை.
2. எங்கள் வீட்டில் பூனைப்பட்டாளம் உண்டு.
3. இல்லை என்று நான் சொன்னது இல்லை.
4. என்னைப் பைத்தியம் என்று சொன்னார்கள்.
5. ஆபீஸிலிருந்து எனக்கு `மெமோ' வந்துவிட்டது.

V மாதிரியில் உள்ளதுபோல் வாக்கியங்களை மாற்றி எழுதுக.

மாதிரி: என் மகன் பூனை வேண்டுமென்று அடம் பிடித்தான்.

என் மகன் பூனை வேண்டுமென்று அடம் பிடிக்கிறான்.

என் மகன் பூனை வேண்டுமென்று அடம் பிடிப்பான்.

1. தெருத்தெருவாகச் சுற்றினேன்.
2. சந்துபொந்துகளில் தேடிப்பார்த்தேன்.

3. பஸ்ஸுக்காக டிக்கட் வாங்கினேன்.
4. நான் போகவேண்டிய பஸ் வந்தது.
5. பூனைக்குட்டியைத் தடவிக்கொடுத்தேன்.

VI சொற்களை வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

செல்லப்பிள்ளை	விரதங்கள்	சந்துபொந்து
தட்டுத்தடுமாறு	குடியிருப்பு	பட்டாளம்
சொல்லிவை	காத்திரு	பயணம்
பாடுபடு	வரவேற்பு	அணைத்துக்கொள்

VII தமிழில் மொழிபெயர்த்து எழுதுக.

मेरे कहने पर भी उस ने नहीं माना। पहले से मुझे मालूम था कि वह इतना बोझ उठा नहीं सकता। पूरे परिवार के लोग उसी की आमदनी में रहते थे। तब छोटे भाई को विदेश भेजकर पढ़ाने की ज़रूरत भी क्या थी? माँ बाप को भी उसके बारे में सोचना था। वे सोच रहे थे कि अपने बड़े बेटे के पास बहुत धन दौलत है। वह भी अपनी आर्थिक स्थिति के बारे में किसी से मन खोल कर नहीं कहता था। और अब उस ने बिना कुछ कहे आत्महत्या कर डाला है।

VIII உங்கள் வாழ்க்கையின் *மறக்க முடியாத* ஏதாவதொரு *நிகழ்ச்சி*யைப் பற்றித் தமிழில் ஒரு சிறு குறிப்பு எழுதுக.

24. வேதநாயகம் பிள்ளை

"எட்டாவது வயது எட்டிப் பார்க்கிறவரை நான் நிரட்சரகுட்சியாய் இருக்கிறேன். என் மாதாவினுடைய அலட்டைப் பொறுக்க மாட்டாமல் என் தந்தையார் என்னைத் தனியே அழைத்து "உன் தாயார் உன்னை பள்ளிக்கூடத்திலே வைக்க வேண்டும் என்றாளே! நீ என்ன சொல்கிறாய்"? என்று கேட்டார். உடனே நான், "ஐயா, நானும் படிக்க வேண்டுமா? எனக்கிருக்கிற சுயபுத்தி போதாதா? ஏழைகள் சீவனம் செய்து பிழைக்க வேண்டியதற்காக, அவர்களுக்குக் கல்வி அவசியம் தான். நான் படிக்க வேண்டிய அகத்தியம் என்ன? ஏதாவது வாசிக்க வேண்டியிருந்தால் வாசிக்கவும், எழுத வேண்டியிருந்தால் எழுதவும் நமக்குக் காரியத்தர்கள் இல்லையா? என்றேன். இது நான் சுயமாகச் சொன்னதன்று. என் பாட்டியார் அடிக்கடி அந்த வார்த்தைகளைச் சொல்ல நான் கேள்விப்பட்டதால் அந்தப்படி நான் பாடம் பண்ணிக்கொண்டு சொன்னேன்."

இது `பிரதாப முதலியார் சரித்திரம்' என்ற நாவலில் வரும் ஒரு பகுதி. இதுதான் தமிழில் தோன்றிய முதல் நாவலாகும். இதன் ஆசிரியர் வேத நாயகம் பிள்ளை (1826-- 1889). இவர் பிறந்த ஊர் குளத்தூர். அது திருச்சி மாவட்டத்தில் உள்ள ஒரு சிற்றூர். இளமையில் இவர் திண்ணைப் பள்ளிக்கூடப் படிப்பே பெற்றார். எனினும் நுண்ணறிவு சிறந்து விளங்கியமையால் எண்ணும்

எழுத்தும் திருந்தக் கற்றார். நீதிமன்றத்தில் அப்போது மொழிபெயர்ப்பாளராக இருந்த தியாகப் பிள்ளை என்பவரோடு தங்கி ஆங்கிலக் கல்வியும் அமைவுறப் பெற்றார்.

வேதநாயகம் பிள்ளை தமது இருபத்திரண்டாம் வயதில் திருச்சிராப்பள்ளி வழக்கு மன்றம் ஒன்றில் பதிவேடுகள் காப்பாளராகப் பணியாற்றினார். அதன் பின்னர் மாவட்ட வழக்கு மன்றத்தில் மொழிபெயர்ப்பாளராக வேலை பார்த்தார். பின்னர் அவர் தரங்கம்பாடியில் முன்சீப் வேலையில் அமர்ந்தார். மாயூரத்தில் பல ஆண்டுகள் பணியாற்றியமையால் `மாயூரம் வேதநாயகம்' என்று அவருக்குப் பெயர் உண்டாயிற்று.

இவர் பொதுநோக்கு உடையவர். அனைவரும் விரும்பும் வண்ணம் இனிமையாகப் பழகுபவராகவும் உயர்ந்த ஒழுக்க முடையவராகவும் திகழ்ந்தார். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள், இவரது பண்பையும், அறிவையும், நட்பையும் பாராட்டிக் `குளத்தூர் வேதநாயகன் கோவை' என்னும் நூல் ஒன்றை இயற்றினார்.

மேலை நாடுகளில் தோன்றிய நாவல் என்னும் புதுவகை இலக்கியத்தைப் போன்று தமிழில் பிரதாப முதலியார் சரித்திரம், சுகுண சுந்தரி ஆகிய நாவல்களை இயற்றிப் புதிதான இத்துறைக்கு வழிகாட்டினார் வேதநாயகம் பிள்ளை.

இவர் ஒரு சிறந்த கவிஞர். தாம் பாடிய நீதி நூலில் அனைவருக்கும் பொதுவான நீதிகளை உள்ளத்தில் பதியும் வண்ணம் சுவையுறப் பாடியுள்ளார். 'பெண்மதி மாலை' யில் பெண்களுக்கு இன்றியமையாத கல்வியறிவு, பண்பு போன்ற ஒழுக்க நலன்களை அழகுறப் பாடியுள்ளார். இவரது ' சர்வ சமய சமரசக் கீர்த்தனைகள் ' அனைத்துச் சமயத்தினரும் பாடி மகிழும் இசை நலம் சிறந்த பாடல்களாகும். கிருஸ்துவ சமய நூல்களும் இவர் செய்துள்ளார். சத்திய வேத கீர்த்தனைகள், தேவ மாத அந்தாதி, திருவருள் அந்தாதி, திருவருள் மாலை ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

உரைநடை இல்லாத குறையைப் போக்கவும் நீதி நூல், பெண்மதி மாலை ஆகியவற்றில் கூறிய நீதிகளுக்கு உருவம் அளிக்கவும் `பிரதாப முதலியார் சரித்திரம்' நாவலைத் தாம் படைத்ததாக அதன் முகவுரையில் கூறியுள்ளார். கதைத் தலைவரான பிரதாப முதலியாரே தம் கதையைக் கூறுவதாக அந்த நாவல் அமைந்துள்ளது. இந்நூல் கற்பனை நுட்பம் நிறைந்தது. பல கிளைக் கதைகளும் அதில் உள்ளன. சுவையான கதைப்போக்கோடு நகைச் சுவை நிரம்பித் தமிழ் பண்பை இயல்பாக, எளிய உரைநடையில் எழுதிக் காட்டும் நல்லதொரு நாவலாக அது திகழ்கிறது.

சுகுண சுந்தரி என்னும் நாவல் ஒரு சிறு கதைத் தொகுப்புப் போல் அமைந்துள்ளது. இவருடைய உரைநடையில் வடமொழிச் சொற்கள் மிகுதியும்

காணப்படுதல் கூடும். அக்காலத்திலிருந்த மொழிநடையினை இது நமக்கு உணர்த்துகிறது.

சொற்பொருள்

எட்டிப்பார்	झाँककर देखना	சுயபுத்தி	अपनी बुद्धि, सूझ बूझ
சீவனம்	जिंदगी	அகத்தியம்	ज़रूर
நாவல்	उपन्यास	பகுதி	भाग
இளமை	जवानी	நுண்ணறிவு	सूक्ष्म बुद्धि
எண்	संख्या	எழுத்து	अक्षर
நீதிமன்றம்	अदालत	பதிவேடு	खाता
காப்பாளர்	रक्षक	வேலைபார்	नौकरी करना
பொதுநோக்கு	सामान्य द्रुष्टिकोण	இனிமை	माधुर्य
பழகு	वयवहार करना	உயர்	उन्नत होना
பண்பு	सुसंस्कृति	திகழ்	विराजमान होना
அறிவு	बुद्धि	இலக்கியம்	साहित्य
வழிகாட்டு	मार्ग दर्शन करना	நீதி	न्याय
உருவம்	रूप	முகவுரை	भूमिका
நிறை	भरना	கிளைக்கதை	उपकथा
வடமொழி	संस्कृत	உணர்த்து	सूचित करना
மொழிநடை	भाषा-शैली	கற்பனை	कल्पना
வழக்கு மன்றம்	अदालत		
மொழிபெயர்ப்பாளர்	अनुवादक		

பயிற்சி

I வினாக்களுக்கு விடை எழுதுக.

1. வேதநாயகர் எந்த ஊரால் பிறந்தார் ?
2. வழக்கு மன்றத்தில் என்ன பணியாற்றினார் ?
3. மீனாட்சி சுந்தரம் பிள்ளை பாடிய கோவை நூலின் பெயர் என்ன ?
4. பிரதாப முதலியார் சரித்திரம் யாரால், ஏன் எழுதப்பட்டது ?
5. அனைத்துச் சமூகத்தினரும் பாடி மகிழத் தக்க வேதநாயகரின் நூல் எது ?

II சொற்களைச் சரியாகப் பயன்படுத்தி மாதிரியில் உள்ளதுபோல் கோடிட்ட இடங்களை நிரப்புக.

மாதிரி: அவர் .... பணியாற்றினார். (காப்பாளர்)
அவர் காப்பாளராகப் பணியாற்றினார்.

1. முன்சீப் .... அமர்ந்தார். (வேலை)
2. மாயூரம் வேதநாயகம் என்று .... ப்பெயர் உண்டாயிற்று. (அவர்)
3. இவர் .... ப்பழகுபவராகவும், உயர்ந்த ஒழுக்கம் உடையவராகவும் .... (இனிமை, திகழ்)
4. இவர் பல நாவல்களை .... ப்புதுவகை இலக்கியத்திற்கு வழிகாட்டினார். (இயற்று)

III மாதிரியில் உள்ளதுபோல் வாக்கியங்களை மாற்றி எழுதுக.

மாதிரி 1: எண்ணும் எழுத்தும் கற்றார்.

---> எண்ணும் கற்றார். எழுத்தும் கற்றார்.

1. தமிழ்க் கல்வியும், ஆங்கிலக் கல்வியும் பெற்றார்.
2. இனிமையாகப் பழகுபவராகவும், உயர்ந்த ஒழுக்கமுடையராகவும் திகழ்ந்தார்.
3. இவரது பண்பையும், அறிவையும் பாராட்டினார்.
4. இவர் நாவல்களையும், சமய நூல்களையும் எழுதியுள்ளார்.

மாதிரி: 2. இவர் நாவல்களையும் சமய நூல்களையும் எழுதினார்.

---> நாவல்களும், சமய நூல்களும் இவரால் எழுதப்பட்டன.

1. இவர் பல பாடல்களைப் பாடியுள்ளார்.
2. பல சிறு கதைகளை இவர் எழுதியுள்ளார்.
3. பிரதாப முதலியார் சரித்திரம் என்னும் நாவலை இவர் எழுதினார்.

IV மாதிரியில் உள்ளதுபோல் தரப்பட்டுள்ள சொற்களை முறையாகப் பயன்படுத்தி வாக்கிங்களை எழுதுக.

மாதிரி: இவர், மொழிபெயர்பாளர், வேலைபார்.

இவர் மொழிபெயர்ப்பாளராக வேலைபார்த்தார்.